விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | சித்திரை 18 | திங்கட்கிழமை | (01.05.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 133

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## வெலிக்கந்தைப் பகுதியில்

# கருணாகுழுவின் முகாம்கள் புலிகளால் தாக்கி அழிப்பு

## 20 துணைப்படையினர் பலி; 25 பேர் படுகாயம்

(பொலநறுவை)

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமான பொலநறுவையில் கருணா குழுவின் முகாம்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் சிறப்பு அதிரடிப் படையினர் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் தாக்கியழித்தனர்.

இதில் இருபது பேர் கொல்லப்பட்டுள்ளனர். இருபத்தைந்து பேர் படுகாயமடைந்துள்ளனர். பதினைந்து பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏழு பேர் விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (10ஆம் பக்கம் பார்க்க)

## ஊரெழுப் பகுதியில் கிரனைட் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு திலீபன் வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை10.30 மணியள வில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரு இராணுவத்தினர் காய மடைந்தனர்.

மோட்டார் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்கு பதிலடி கொடுப்போம்

### கருணா குழு பி.பி.ஸிக்கு பேட்டி

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் தம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்போம் என தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகள் என தங்களை அழைத்துக் கொள்ளும் கருணா குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் தமது சார்பில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகள் முடிபடைந்த பின்னர் தமது உறுப்பினர்களின் நெறிப்படுத்தலில் இத் தாக்குதல் நடத்தப்படும் என கருணா குழுவின் தூயவன் என்பவர் பி.பி.ஸியிடம் தெரிவித்தார்.

அரச கட்டுப்பாடு மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியல்லாத கட்டுமுறிவிலிருந்து ஒன்பது கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள எமது முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர் இத் தாக்குதலில் தமது தரப்பில் ஐந்து பேர் உயிரிழந்ததுடன் விடுதலைப்புலிகளின் தரப்பில் உயிரிழந்த ஏழு பேரின் சடலங்களை தாங்கள் கண்டெடுத்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் தூயவன் தெரிவித்தார். (ச-4)

## மின்சாரம் தாக்கி மாணவன் பலி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையில் மின்சாரம் தாக்கி மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் அன்னலிங்கம் தரணிதரன் (வயது-16) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உறவினர் வீட்டில் கிணறு இறைத்துக் கொண்டிருக்கும்போது மின்சார சபையின் இணைப்புக் கம்பி அறுந்து விழுந்த போதே அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சுய பாதுகாப்பு வசதியுடன் வன்னி வந்தனர் தளபதிகள்

விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் சுய பாதுகாப்புடன் நேற்றிரவு கிளிநொச்சி வந்தடைந்தனர். நேற்று மாலை 5 மணிக்கு கிழக்கு மாகாணப் போராளிகளை ஏற்றிவருவதற்காக முல்லைத்தீவிலிருந்து திருகோணமலை நோக்கி புறப்பட்ட கடற்புலிகளின் படகுகளை கடற்படையினர் வழி மறித்து தாக்குதல் நடத்தினர்.

அப்போது கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய முகாம்களில் இருந்தும் எமது படகு (10 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் நடத்துநர் யாழில் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் மின்சார நிலைய வீதியில் நேற்று மதியம் 11.45 மணியளவில் மினிபஸ் நடத்துநர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குருநகர் வடக்கைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான ஜோசப் பிரகாஷ் (வயது -21) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

இவரது சடலத்தில் தலையிலும் நெஞ்சுப் பகுதியிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. இச் சூட்டுச் சம்பவத்தினையடுத்து முகமாலை தனியார் சிற்றூர்திச் சேவைகள் நிறுத்தப்பட்டன.

இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இச் சூட்டை மேற்கொண்டவர்களை நோக்கி அப்பகுதியில் நின்ற இராணுவத்தினர் சுட்டனர் எனவும் இதனையடுத்து அவர்கள் தாம் பயணித்த மோட்டார் சைக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டியில் கிளைமோர்த் தாக்குதல்

அல்லைப்பிட்டியில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இரு கடற்படையினர் படுகாயமடைந்தனர். அல்லைப்பிட்டி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் நேற்று மாலை 6.40 மணிக்கு இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த இரு படையினரும் உலங்கு வானூர்தி மூலம் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதியோர சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்தகடற்படையினரை இலக்கு வைத்து இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## சமாதான முயற்சிகள் குறித்து தயா மாஸ்டருடன் அரசு பேச்சு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அமைச்சர் ஹேகலிய ரம்புக்வெல தொலை பேசியூடாகத் தொடர்பு கொண்டு சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டரைத் தொடர்பு கொண்ட ரம்புக்வெல பேச்சு மேசைக்கு விடுதலைப்புலிகள் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தென்தமிழீழத் தளபதிகளின் கிளிநொச்சி பயணத்திற்காக இரண்டு எயார் லங்கா கடல் விமானங்களை அரசாங்கம் வழங்க முன்வந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த தயா மாஸ்டர் எந்தவொரு விடயத்தையும் நோர்வே அனுசரணையாளர் ஊடாகத் தெரிவிக்குமாறு கூறியுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## நேரடிப் பேச்சு மே 10 இல்?

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் சுற்று சமாதானப் பேச்சுக்கள் எதிர்வரும் மே மாதம் 10 ஆம்திகதி நடத்துவதற்கு நோர்வேத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இது குறித்து நோர்வேப் பிரதிநிதிகள் தீவிர ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேச்சுக்கான திகதி குறித்து அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் விரைவில் அறிவிக்கவுள்ளதாக நோர்வேத் தரப்புத் தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகளின் கிழக்குத் தளபதிகள் அவர்களின் தலைமைப் பீடத்தை விரைவில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அதற்காக அரசு பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

அச் சந்திப்பினையடுத்து விடுதலைப் புலிகள் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்குச் செல்வர் என தாம் நம்புவதாக நோர்வே தெரிவித்துள்ளது.

எனினும் இத் திகதி குறித்துஇரு தரப்பினருக்கும் வெகுவிரைவில் தெரிவிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. (ச)

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சரத் பொன்சேகாவின் திட்டம் எங்கே தீட்டப்பட்டது? குழப்பத்தில் சிக்கித்தவிக்கும் இலங்கைப் பொலிஸார்

இலங்கை இராணுவத் தளபதி மீதான தாக்குதலுக்கான திட்டம் இராணுவத் தலைமையகத்திற்கு அருகாமையிலிருக்கும் ஓர் உயர்ந்த கட்டடத்தில் வகுக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்தவற்காக இரகசியப்பிரிவின் சிறப்புக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக உள்வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் தற்போது இராணுவத் தலைமையகத்தை அண்டியிருக்கும் உயரமான கட்டடங்களுக்குச் சென்று விசாரணைகளை நடத்துவதாக இரகசிய பிரிவினர் தெரிவித்துள்ளனர். இராணுவத் தலைமையகத்திற்கு அருகில் இருக்கும் சில கட்டடங்களிலிருந்து பார்க்கும் போது இராணுவ மருத்துவமனையின் முன்புறப் பாதை குண்டுவெடிப்பு நடைபெற்ற இடம் ஆகியன தெளிவாகத் தெரிவதனை அந்த அதிகாரிகள் கண்டுள்ள னர்.

மேலும் சில கட்டடங்களில் இருந்து பார்க்கையில் இராணுவத்தளபதி அலுவலகத்திலிருந்து வீட்டிற்குச் செல்லும் பாதை தெளிவாக தெரிவதனையும் விசாரணை நடத்தும் குழுவினர் கண்டறிந்துள்ளனர். இதற்கமைய இந்த தாக்குதல் திட்டம் உயர்ந்த கட்டடத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்திருப்பதாக இரகசியப் பிரிவின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி பயணிக்கும் முறை அவரின் செயற்பாடுகள் ஆகியவற்றை உயர்ந்த கட்டடமொன்றிலிருந்து அவதானித்த தாக்குதல் திட்டக்காரர்கள் அதன்படி தற்கொலை தாரியை தலைமையகத்திற்குள் அனுப்பியிருக்கலாமெனவும் சந்தேகிக்கின்றனர்.

தாக்குதலுக்கு சிறிது நேரத்திற்கு முன்னதாக தற்கொலை தாரியின் செல்லிடப்பேசிக்கு வந்த அழைப்பும் இத்தகைய உயர்ந்த கட்டடத்திலிருந்து திட்டங்களை வகுத்தவரினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென்றும் சந்தேகிக்கப்படுகிறது. இவையனைத்தும் சந்தேகங்களே என்றும் இவற்றைப் பற்றிவிசாரணைகளை மேற்கொண்டால் ஒரு இலக்கை அடைய முடியுமாக இருக்கும் என்றும் இரகசிய பிரிவினர் தெரிவிக்கின்றனர். (து)

# இணைத்தலைமை நாடுகள் மீது ஜாதிகஹெறல உறுமய பாய்ச்சல்

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் கைவிடுமாறு இதனைத் தலைமை நாடுகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தமைக்கு ஜாதிகஹெறல உறுமய கண்டனம் தெரிவித்துள்ளது.

இத்தகைய அழுத்தம் கொடுப்பதாக இருந்தால் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் அவர்களை பேச்சுவார்த்தை மேசையில் தொடர்ந்தும் வைத்திருத்தல் ஆகியவற்றின் முழுப் பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஜாதிக ஹெறல உறுமய கூறியுள்ளது.

ஜனநாயக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் நியமிக்கப்பட்ட அரசாங்கம் என்ற வகையில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உரிய பதிலை அளிப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமையும் பொறுப்பும் உள்ளது. அந்த உரிமைக்கும் பொறுப்பிற்கும்முறையற்ற வகையில் அழுத்தங்களைக் கொடுப்பதற்கு இணைத்தலைமை நாடுகள் முயலக்கூடாது.

இராணுவத் தளபதியை படுகொலைசெய்வதற்கு முயற்சிக்கப்பட்டிருக்கும் இவ் வேளையில் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் கட்டாயம் நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். (து)

# பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

## ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள்

மனிதாபிமான உதவிகளைப் பெறும் வகையில் பொதுமக்களின் பாதுகாப்பை தமிழீழ விடுதலைப்புலிகளும், சிறிலங்கா அரசாங்கமும் உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ.நா.வின் மனிதாபிமான உதவிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் ஜான்எக்லெண்ட் இதுபற்றிக் கூறுகையில், மக்கள் உயிரிழப்பு, புதிய இடப்பெயர்வுகள், வர்த்தக நிலையங்கள் நிர்மூல மாக்கப்படுதல், மனிதாபிமானபணியாளர்களுக்கு அச்சுறுத்தல் ஆகியவை பொதுமக்களுக்கு பாரிய பதற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மனிதாபிமான உதவிகளையும், ஆழிப் பேரலை மீள மைப்பு உதவிகளையும்மேற்கொள்ளுவதில் இது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இலங்கையில் அண்மைய வன்முறைகளில் நூற்றுக் கணக்கானமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கானமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இனப்பிரச்சினையால் 3 இலட்சம் மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்கள் மனிதாபிமான உதவிகளைப் பெறுவதற்கான சூழ்நிலையை அனைத்துத் தரப்பினரும் உருவாக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (து)

# வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்படக்கூடிய சாத்தியம் அதிகரிப்பு

வடக்கு-கிழக்கில் நிலவும் அமைதியற்ற சூழ்நிலையால் எதிர் வரும் 20ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு இட முள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு பிரதேச சபை, காத்தான்குடி நகரசபை, கோரளைப் பற்று பிரதேச சபை, ஏறாவூர் நகர சபை ஆகியவற்றிற்கான தேர்தல் ஒத்திவைக்கப்படக்கூடும்.

வவுனியா நகரசபை வேட்பாளர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன் பல பிரதேசங்களில் முப்படையினரால் பாதுகாப்பு நடவடிக்கைகளைமேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. இதனால் நேர்மையான தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பிரதேசங்களில் தேர்தல் நடத்துவது சம்பந்தமாக தேர்தல் அதிகாரிகளுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்ற பின்னரே முடிவெடுக்கப்படவுள்ளது. (து)

# இராசி பலன்

**01.05.2006**
**(சித்திரை 18, திங்கட் கிழமை)**
**சதுர்த்தி முன்னிரவு 10.00 மணிவரை**
**மிருகசீரிடம் பின்னிரவு 12.45 மணிவரை**
**இராகுகாலம் 7.27-8.57மணிவரை**
**சுபநேரம் 11.57-1.27 மணிவரை**
**அமிர்த சித்தம்**
**சதுர்த்தி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள சேர்க்கை, கலந்துரையாடல், செல்வாக்கு. |
| இடபம் | வேலைச்சுமை, அதிகசெலவு, கோபப் படுதல், முயற்சி தாமதம். |
| மிதுனம் | தொழில்சிந்தை, நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, கற்பனை மிகுதி. |
| கடகம் | வீண்செலவு, காரிய அலைச்சல், உறவினர் வெறுப்பு, வேலைச்சுமை. |
| சிங்கம் | காரிய அனுகூலம், செல்வாக்கு, உடல் நலம், புதியபொருள்சேர்க்கை. |
| கன்னி | பிறர் உதவி, செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, நல்ல செய்தி. |
| துலாம் | புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை, தந்தை வழி உறவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | அமைதிக்குறைவு, பிரயாண பயம், உடல் நலக்குறைவு, எதிர்பாராத நன்மை. |
| தனுசு | சென்ற இடத்தில் செல்வாக்கு, அபூர்வ சந்திப்பு, முயற்சி கைகூடும், பணவருவாய். |
| மகரம் | தொழிற் நன்மை, ஆரோக்கியம், காரிய சித்தி, சுபநிகழ்வு. |
| கும்பம் | உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம், பணவிரயம், குடும்பக்கவலை. |
| மீனம் | உடல்நலக்குறைவு, தாய்வழி உறவு, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம். |

- வளவன்

# துணை இராணுவக்குழு முகாம் தகர்ப்பில் 10 பேர் பலி; 25பேர் படுகாயம்

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தை தீவுச்சேனைப் பகுதியில் சிறிலங்காப் படையின் துணை இராணுவக் குழுவினரின் மூன்று முகாம்கள் தாக்கியழிக்கப்பட்டதாகவும் இதில் 15க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் பலரைக் காணவில்லை என்றும் மட்டக்களப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

முகாம்கள் முற்றாக தாக்கியழிக்கப்பட்டதாகவும் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுக்கொண்டிருந்த போது முகாமை நோக்கி ஆட்லறி எறிகணை வீச்சுத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிறிதொரு தகவல்களின்படி இம் முகாம் பகுதியில் துணை இராணுவக் குழுவினரால் கடத்தப்பட்ட தமி ழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் வாகனமும் காணப் பட்டதாக கூறப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற போதிலும் சேத விவரங்கள் எதுவும் முழுமையாக இதுவரை வெளியாகவில்லை.

இத்தாக்குதல் சம்பவத்தை இலங்கை இராணுவத்தின் பேச்சாளர் பிரிக்கேடியர் பிரசாத் சமரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவத்தில் துணை இராணுவக் குழுவைச் சேர்ந்த 10பேர் கொல்லப்பட்டதாகவும் 25பேர் காயமடைந்ததாகவும் காயமடைந்தவர்கள் பொலநறுவை, வெலிக்கந்தை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் அரச தரப்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)



ஹயஸ்வானில் சென்று மானிப்பாய் சுதுமலைஅம்மன் கோயிலுக்கு அண்மையில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டுநையப் புடைக்கப்பட்ட பின்னர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருவதைபடத்தில் காணலாம். படங்கள்:- எஸ்.ரி.ராஜா சதீஸ்.

# மே தினம் போற்றுதும்

மேதினம் போற்றுதும் மேதினம் போற்றுதும்
மேதினியில் உழைப்போர் உயர்ந்து வாழவே
மேதினம் போற்றுதும் மேதினம் போற்றுதும்
தம் உடல் வருத்தியே உழைத்தார்
தன்னலம் பாராது பிறர் நலம்காத்தார்
ஏர் பிடித்தே மண்ணுயிர் காத்தார்
பார் சிறக்கவே பல தொழில் புரிந்தார்
நேர் தொழிலாளிக்கு யாரிங்குமில்லையே
ஊர் கூடியே உவகை கொண்டாடியே
மேதினம் போற்றுதும் மேதினம் போற்றுதும்

*நீர்வை இரதி*

# "மேதினி போற்றும் மேதினம்"

*தீதில்லா உழவனுக்கோ*
*தைநாளே திருநாள்*
*சிறைவாடும் கைதிக்கோ*
*'விடுதலைநாள்' திருநாள்*
*மாதவளின் வாழ்க்கையிலோ*
*'மணநாளே' திருநாள்*
*மணற்காட்டின் குயிலுக்கோ*
*'வேனில்நாள் திருநாள்'*
*நதியற்ற பயிருக்கோ*
*'மழைநாளே' திருநாள்*
*நடனமிடும் மயிலுக்கோ*
*'கார்நாளே' திருநாள்*
*மேதினியில் உழைப்பாளர்*
*உரிமைகளை ஈன்ற*
*மேன்மை தவழ் தொழிலாளர்*
*திருநாளே மேநாள்!*

*மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்*

# வளமீயும் தொழிலாளர் வாழ்வென்றும் சிறக்கட்டும்!

*உலகத்துத் தொழிலாளர் ஒன்று கூடி*
*உரிமைகளை வென்றெடுக்க ஒலித்த நாளில்*
*பலமிதுவே யெனவுலகின் விழிதிறந்த*
*பங்கமிலா 'மே' தினத்தின் பாங்குகொள்வோம்!*

*தொழிலாள வர்க்கத்தை யுறிஞ்சிவாழும்*
*தொன்று தொட்டுத் தொடருகின்ற வழக்கு மண்ணில்*
*இழிவான செயலென்றே யிடித்துக் கூறும்*
*இங்கிதத்தை இந்நாளிதயங்கொள்வோம்!*

*ஊதியமும் உறைவிடமும் உண்டியன்ன*
*உயருரிமை தமைக்கோரி உழைக்கும் வர்க்கம்*
*மேதினியில் குரலெழுப்பும் 'மே' தினத்தின்*
*மேன்மையினை மேலுயர்த்த உறுதிகொள்வோம்!*

*தொழிலாளர் மகிழட்டும் துன்பங்கள் தொலையட்டும்*
*இழிவான எண்ணங்கள் எமைவிட்டு நீங்கட்டும்*
*வளமான 'மே' நாளில் ஒளியெங்கும் பரவட்டும்*
*வளமீயும் தொழிலாளர் வாழ்வென்றும் சிறக்கட்டும்!*

*கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்*

# இலங்கை சட்டக் கல்லூரி 2007 ஆம் ஆண்டுக்கு மாணவர் சேர்க்கை

2007 ஆம் ஆண்டுக்கு இலங்கை சட்டக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணபப்பபடிவங்களை மே மாதம் 31ஆம் திகதி வரை இலங்கை சட்டக் கல்லூரி அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரையும் பி.ப.1.30 மணிமுதல் 3.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

**கல்வித்தகைமை**

அ.கல்வித் தராதர உயர்தரப்பரீட்சையில் (புதிய திட்டம்) ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி (2000 ஓகஸ்ட் மாதத்திலும் அதற்குப் பின்னருமான)

இருப்பினும், பழைய திட்டத்தின் கீழ் பரீட்சை எழுதிய ஒருவர் ஒரே தடவையில் 4 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

ஆ.சித்தியடையும் பாடங்கள் சட்டக் கல்விச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டனவாக இருக்கவேண்டும்.

அத்துடன், கா.பொ.த (சா/த) பரீட்சையில் அல்லது தேசிய கல்வி தராதரப் பரீட்சையில் ஆங்கிலத்திலும் சிங்களம்/ தமிழிலும் திறமைச் சித்தி.

**புகுமுகப்பரீட்சை**

2006 செப்ரெம்பர் மாதமளவில் நடைபெறும் புகுமுகப்பரீட்சைக்கு சகல பரீட்சார்த்திகளும் தோற்ற வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான கடைசித் திகதி**

நன்கு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அதிபர், இலங்கை சட்டக் கல்லூரி, 244, ஹல்டொப் வீதி, கொழும்பு-12 என்ற விலாசத்துக்கு 2006 மே 31 ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டவேண்டும்.

**வெளியீடும் விண்ணப்பக் கட்டணமும்**

தேவையான தகவல்களையும் பழைய வினாத்தாள்களையும் விண்ணப்பப்படிவத்தையும் கொண்ட வெளியீட்டை ரூபா 750 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டணக் கொடுப்பனவு ஹற்றன் நஷனல் வங்கியின் எந்தக் கிளையிலும் கணக்கு இலக்கம் 01-18041-01-1, ஹற்றன் நஷனல் வங்கி ஹல்ஸ்டொப் கிளை - சட்டக் கல்லூரியின் இணைந்த சபை என்ற பெயருக்கு எடுக்கப்பட வேண்டும். வங்கியின் மூலப் பற்றுச்சீட்டு இலங்கை சட்டக் கல்லூரி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

வங்கி பணத்துண்டில் தேசிய அடையாள இலக்கமும் தலைப்பெழுத்துடன் கூடிய விண்ணப்பதாரியின் பெயரும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பதிவுத் தபால் மூலம் வெளியீட்டையும் விண்ணபப்படிவத்தையும் பெற விரும்புவோர் ரூபா 750 க்காக வங்கியின் மூல பற்றுச் சீட்டுடன் 15" X 10" அளவுள்ள விலாசமெழுதப்பட்ட 100 ரூபா பெறுமதியான முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாமென இலங்கை சட்டக் கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (து-132)

# 17,287 பேர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்!

(கொழும்பு)

2005ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 17 ஆயிரத்து 287 பேருக்கு பல்கலைக்கழகத்திற்கான அனுமதி கிடைத்துள்ளது.

மறு சீரமைக்கப்பட்ட இஸட்கோர் புள்ளிகளினடிப்படையில் மேலதிகமாக இரசாயன மற்றும் பௌதிக விஞ்ஞானத் துறைகளிலிருந்து 955 பேர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக வெளியிடப்பட்ட இஸட் புள்ளிகளினடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எவருக்கும் மறுசீரமைக்கப்பட்ட இஸட் புள்ளிகளின் படி எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இம்முறை மருத்துவத்துறைக்கு ஆயிரத்து 139 மாணவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது. பல் வைத்தியத்துறைக்கு 84 மாணவர்களுக்கும், மிருக வைத்தியத் துறைக்கு 83 மாணவர்களுக்கும் அனுமதி கிடைத்துள்ளது.

இதேபோன்று பொறியியல் துறைக்கு ஆயிரத்து 240 மாணவர்களுக்கும், முகாமைத்துவத்துறைக்கு 2 ஆயிரத்து 252 மாணவர்களுக்கும், கலைத்துறைக்கு 3 ஆயிரத்து 590 மாணவர்களுக்கும், சட்டத் துறைக்கு 232 மாணவர்களுக்கும் அனுமதிகள் கிடைத்துள்ளன.

மறுசீரமைக்கப்பட்ட இஸட் புள்ளிகளின் படி 129 மாணவர்கள் புதிதாக மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இம்முறை அதிகளவான மாணவர்கள் மருத்துவத்துறைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதால் ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் இன்னும் நான்கு மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தென் பகுதியிலுள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்கள் விரும்பினால் வடக்கு கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் இடம் ஒதுக்கப்படும் அவ்வாறு வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மாணவர்களுக்கும் தென்பகுதிகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் இடம் ஒதுக்கப்படும்.

மறுசீரமைக்கப்பட்ட இஸட் புள்ளியினால் எந்தவொரு மாணவருக்கும் அநீதி இழைக்கப்படாது இவ்வாறான பரீட்சை விடைத்தாள் திருத்தல் நடவடிக்கைகளில் பிழைகள் ஏற்படாது தடுக்க விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (த-9)

# திருமலையில் இடம்பெற்ற தாக்குதல்கள் யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும்!

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதல்கள் யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் என்று இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் முதலாம், இரண்டாம் பிரிவுகளை மீறியுள்ளதாக கண்காணிப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதல்களை நிறுத்த வேண்டுமென்றும் இதனால் பிரச்சினைகள் அதிகரிக்குமென்றும் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலைமை சுமூகமடைந்த போதிலுமே இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் கொலை செய்யப்படுவது, கிளைமோர் தாக்குதல்கள் மேலும் இடம் பெற்றுவருகின்றமையும் கவலைக்குரிய விடயமென்றும் கண்காணிப்புக் குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச படைகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை தமிழீழ விடுதலைப்புலிகளும் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு எதிர்பார்ப்பார்களே ஆனால் வன்முறைகளை நிறுத்த வேண்டுமென்றும் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (த-9)

# கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் நாளை நடைபெறவிருந்த பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (த-9)

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மக்களின் எதிர்பார்ப்புக்களை கருத்திற் கொண்டு கருமமாற்றுவது அவசியம். கிராம மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதனூடாகவே தேசிய மட்டத்திலான அபிவிருத்திகளை தொடரமுடியும்.

இதற்கு வழியமைக்க வேண்டிய பொறுப்பு பிரதேச சபை உறுப்பினர்களைச் சாடும் என தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

பன்னாலை பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண வைபவத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர் - அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை சக்தி மிக்கதாக்குவதற்கு பிரதேச சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பு அவசியம்.

மக்களின் விருப்பு வெறுப்புகள் பிரதேச சபையினூடாகவே மத்திய அரசுக்குச் செல்வதால், பாரிய பொறுப்பும், கடமையும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு உண்டு.

கடந்த காலங்களில் மேற்கொண்ட பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊடாக இப்பிரதேச சபைக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இங்குள்ள 87 கிராம சேவகர் பிரிவுகளிலும் கிராமிய அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு சகல உதவிகளையும் செய்ய நான் தயாராக உள்ளேன் என்றார். (த-7)

# பின்தங்கிய மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிக்க பரிகாரக்கற்பித்தல் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பின்தங்கிய நிலையில் காணப்படும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு பாடசாலைகளில் பரிகாரக் கற்பித்தல் நடவடிக்கைகள் அமுல்படுத்தப் படவுள்ளதாக மாகாணக் கல்வித் திணைக் களம் அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியும் இடைநிலைக் கல்வியும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பது குறித்து ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையினை மாற்றியமைத்து துரித கதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கத்துடன் இப்பரிகாரக் கற்பித்தல் முறை அமுல்படுத்தப் படவுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இதன் பிரகாரம் மாணவர்களின் கற்றல் பின்னடைவுக்குரிய காரணங்களையும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அறிந்து தேவையான தீர்வுகள் காணப் படவுள்ளன.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 77 கோட்டக் கல்விப் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 616 பாடசாலைகளில் இவ் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (த-7)

# அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் 5 ஆயிரம் ஆசிரியர்களுக்கு கணனிக் கல்வியை கற்பதற்கான புலமைப் பரிசில்களை வழங்குவதென கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்களின் கணனி அறிவை விருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்தப் புலமைப்பரிசில் திட்டம் அமுல் செய்யப் படவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்தின நேலகே தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இடைநிலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் அரச பாடசாலைகளில் கணனிக் கல்வியை போதிப்பதற்கான பல்வேறு வேலைத் திட்டங்களை கல்வியமைச்சு தற்போது அமுல்ப் படுத்தி வருகின்றது.

பாடசாலை மாணவர்களுக்கு உரிய வகையில் கணனி அறிவு போதிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் ஆசிரியர்களுக்கு இலவசமாக கணனிக் கல்வியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு கணனிக் கல்வியை கற்பதற்கான நிதியுதவியும் கையேடுகளும் வழங்கப்படும். (9)

# கூட்டம்

தென்மராட்சி பிரதேச ஒருக்கிணைப்பு குழுக்கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் யாழ்.அரச அதிபர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட உயர் அதிகாரிகள் கலந்து கொள்வர்கள் என பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (7)

## சட்டவிரோதமாக

# மண்போட்டு நிரப்பப்படும் வயற்காணிகளை அரச உடமையாக்குவதற்கு முயற்சி

(கொழும்பு)

சட்ட விரோதமாக மண் போட்டு நிரப்பப்படும் வயற்காணிகளை அரச உடைமையாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

கமநல அபிவிருத்தி திருத்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் அமுல் செய்து, தேவையான சட்டங்களை உருவாக்கப் போவதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். சமீபத்தில் கொழும்பு மாவட்ட உதவி கமநல சேவை ஆணையாளர் மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களை சந்தித்து கலந்துரையாடியபோது, அமைச்சர் அந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

கொழும்பு மாவட்டத்தில் வயற்காணிகளை மண் போட்டு நிரப்பும் சட்ட விரோத செயல்கள் தீவிரம் பெற்றுள்ளன. இந்த மோசடியில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் சிலரும் உதவி செய்வது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு காணிகள் சட்ட விரோதமாக நிரப்பப்படுவதால், வெள்ளப்பெருக்கு போன்ற மோசமான பின் விளைவுகள் ஏற்படும் என்றும் கமநல சேவைகள் மற்றும் விவசாய சமூக சேவை அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார். (த-7)

## இன்று ஒரு தகவல்

# நல்ல பண்புகள்

ஒரு நண்பர் வந்தார். "நல்ல பண்புகள் என்று சொல்கிறார்களே... அப்படியென்றால் என்ன சார்?" என்று கேட்டார் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. இது கூடத் தெரிந்துகொள்ளாமல் இவ்வளவு நாள் இருந்து விட்டாரே என்று நினைத்தேன். அதனால்தான் அவர் எனக்கு நண்பராக வந்து சேர்ந்திருக்கிறாரோ என்று தோன்றியது. அதன்பின் அவரை உட்காரவைத்துப் பேசிக்கொண்டிருந்தேன்.

எவையெல்லாம் நல்ல பண்புகள் என்பதைப் பற்றி நபிகள் நாயகம் சொல்லியிருக்கிறார். அவர் நமக்குக் கூறியிருக்கும் நற்பண்புகள் என்னென்ன தெரியுமா? ஒற்றுமையுடன் இருப்பது, நல்ல்காரியங்கள் செய்வது, தர்மம் செய்வது, சலாம் சொல்ல முந்திக்கொள்வது, நோயாளிகளைச் சென்று காண்பது, நல்லவரா கெட்டவரா என்று பாராமல் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்வது.

முஸ்லீமா, முஸ்லீம் அல்லாதவரா என்று பாராமல் அயலாருடன் அன்புடன் நடந்துகொள்வது, முதியோருக்கு மரியாதை செய்வது, மன்னிப்பது, சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது, கோபத்தை அடக்குவது, விலக்கப்பட்டதைத் தவிர்ப்பது, உறவினர்களிடம் அன்பாய் நடந்துகொள்வது, கர்வம் கொள்ளாமல் இருப்பது இவை யாவும் நற்பண்புகள் என்று நபிகள் நாயகம் கூறியுள்ளார். இந்தப் பண்புகள் எல்லா மனிதர்களுககும் இருந்துவிட்டால் நாம் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை.

ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதை ஒரு பண்பாகவே வளர்த்துக்கொண்டோம் என்றால் அதன் பின் நீ வேறு நான்வேறு என்ற நினைப்பே வராது. நல்ல காரியங்களையே செய்ய வேண்டும். தீய காரியங்களைச் செய்யக்கூடாது. தர்மம் செய்யவேண்டும் அது ஒரு கடமை. எதிரில் ஒருவரைப் பார்க்கிறோம் அவர் சொல்வதற்கு முன்பு நாம் முந்திக்கொண்டு அவருக்கு சலாம் சொல்ல வேண்டும். அது ஒரு சிறந்த பணபு. ஒருவர் உடல் சுகமில்லாமல் இருக்கிறார் என்று கேள்விப்பட்டால் உடனே அவரைப் போய்பார்க்க வேண்டும் அது ஒரு பண்பு.

ஒரு பிரேத ஊர்வலம் போகிறதென்று வைத்துக் கொள்ளுங்களேன்... செத்துப் போனவர் நல்லவரா கெட்டவரா என்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்காமல் அந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளவேண்டும் அது தான் சிறந்த பண்பு. அந்த ஆள் நமக்கு வேண்டாதவன் நாம் ஏன் போக வேண்டும் என்று நினைக்கக்கூடாது. முஸ்லீமா? முஸ்லீம் அல்லாதவரா என்று பார்க்காமல் அயலாரிடம் அன்பாக நடந்து கொள்ளவேண்டும்.

வயதானவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது. அவர்களுக் குமரியாதை கொடுக்கவேண்டும் அவர்களிடம் பணிவாக நடந்துகொள்ளவேண்டும். அவர்களை மதிக்கவேண்டும், மன்னிப்பது பெரிய விஷயம். மனிதனுக்கு அந்தப் பண்பு மிக முக்கியம் சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது ஒரு சிறந்த குணம். கோபப்படக்கூடாது கோபத்தை அடக்கவேண்டும். வேண்டாத விஷயங்களையெல்லாம் விட்டுவிட வேண்டும். அதாவது விலக்கப்பட்டதையெல்லாம் தவிர்க்கவேண்டும். உறவினர்களிடம் அன்பாக நடந்து கொள்ளவேண்டும். அது ஒரு சிறந்த பண்பு. எந்த நிலைமையிலும் கர்வம் கொள்ளக்கூடாது. இவை யாவும் நறபண்புகள் என்று நபிகள் நாயகம் அடையாளம் காட்டுகிறார்.

நாமெல்லாம் அதைப்புரிந்து நடந்துகொண்டால் இந்த உலகத்தில் நல்ல விதமாக வாழலாம். புரிந்து கொள்ளாவிட்டால் கஷ்டம்தான் இப்போது உதாரணத்திற்கு சண்டைச்சரவுகளைத் தீர்த்து வைப்பது ஒரு நல்ல பண்பு என்று இப்போது பேசிக்கொண்டோம். ஆனால் இன்று காலம் எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.

நடுத்தெருவில் ஒரு அடிதடி சண்டை நடந்தது. சுற்றி ஏகப்பட்ட கூட்டம். அந்தக் கூட்டத்தின் நடுவிலிருந்து ஒரு ஆள தப்பித்து வெளியே வந்தான் அவனது உடைகள் கிழிந்து தொங்கின. வசமாக அடிவாங்கியிருப்பான் போலிருக்கிறது. நான் அவனைக் கூப்பிட்டு அறிவுரை சொன்னேன்.

"ஏன சண்டை பிடிக்கிறீகள், சமாதானமாகப் போங்கள் அதுதான் நல்லது"என்றேன். "அட போங்கள் சார்... நான் சண்டைபிடித்தவன் இல்லை... அதைத் தீர்த்து வைக்கப போனவன்...இப்படி ஆகிவிட்டேன்" என்று கூறிக் கொண்டே அங்கிருந்து வேகமாக நடந்து போகிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பார்களாம்

## இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை வெற்றியடையச் செய்வதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கப் போவதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

விரைவில் சமாதானத்தைக் காண்பதே தமது விருப்பம் என்றும் இந்த விருப்பத்தை நிறைவேற்ற தொடர்ந்து தாம் அர்ப்பணிப்புடனும் பொறுமையுடனும் நடந்து கொள்ளப் போவதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.


கடந்த சில தினங்களில் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டுமென்பதற்காக இராணுவம் மிகவும் அர்ப்பணிப்புடன் நடந்துகொண்டது. தொடர்ந்தும் போர்நிறுத்த உடன்படிக்கையைப் பேணிப் பாதுகாத்து அதற்கு கட்டுப்பட்டு நடக்கும் அமைப்பாக இராணுவம் நடந்துகொள்ளுமென பிரிகேடியர் சமரசிங்க கூறினார்.

படைத்தரப்பினருக்கு உதவி செய்வது பொது மக்களின் பொறுப்பும் கடமையுமாகும். அத்துடன் தமது சூழல் பற்றி விழிப்புடன் இருந்து சந்தேகத்திற்குரிய விடயங்களை இராணுவத்தினருக்கும் அறிவிக்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார். (க-7)

# புலிகளின் பரப்புரையால் பயந்து நடுங்கும் ஜனாதிபதி

(கொழும்பு)

தென் தமிழீழத்தில் இலங்கையின் முப்படைகளும் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியது தொடர்பான



விடுதலைப் புலிகளின் பரப்புரை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அச்சமடைந்துள்ளார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அவர் பேசுகையில்,

நாட்டின் அனைத்துக் கட்சிகளும் விடுதலைப் புலிகளுக்கு இடமளிக்கும்வகையில் கருத்து தெரிவிக்காமல் அவதானமாக இருக்கவேண்டும்.விடுதலைப் புலிகளின் உண்மையான யுத்தத்தை விட வெளிநாடுகளில் மேற் கொள்கின்ற உண்மைக்கு மாறான பரப்புரை யுத்தம் மிகவும் ஆபத்தானது என்றார்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இராணுவத்தினர் மேற்கொண்ட பாது காப்பு நடவடிக்கையை ஒரு பாரிய குற்றமாக தமிழீழ விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றனர்.

தமிழீழ விடுதைலப் புலிகள் பாரதூரமான வகையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதையடுத்தே இராணுவம் தற்பாதுகாப்பு நடவடிக் கையை மேற் கொண்டது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண எதுவித தியாகத்துக்கும் தயாராக இருக்கிறோம். அனைத்துக் கட்சியினரும் எமக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனத் தெரிவித்ததுடன்,

இராணுவத் தலைமை யகம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து அரசாங்கத் துக்கு அனைத்துக்கட்சிகளும் ஆதரவளித்தமைக்கு பாராட் டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் கூறினார். (து)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேண்டுகோள்

(திருகோணமலை)

திருமலை-மூதூரில் இலங்கையின் முப்படைகளும் நடத்திய தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய மனிதாபிமான உதவிகளை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுவிஸில் உள்ள மனிதாபிமான தொண்டர் நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு ஆகியவற்றின் தலைமையகப் பணிமனைகளுக்குச் சென்றிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைப் பணிப்பாளர் றெஜி ,தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனைத்துலக பணிப்பாளர் நாகா நாகேந்திரன் ஆகியோர் மூதூரில் பாதிக்கப்பட்ட மக்களின்உண்மை நிலைமையையும் எடுத்து விளக்கியிருக்கின்றனர்.

மூதூரில் 2 நாட்களாக நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளைக் கூட வழங்குவதற்கு தொண்டர் அமைப்புக்களுக்குத் தடை விதித்த இலங்கை ஆயுதப் படையினரின் நடவடிக்கையினால் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களை அவர்கள் விபரித்தனர்.

எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல்கள் நடைபெறாத வகையில் பார்த்துக் கொள்ளுமாறும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அனைத்துலக தொண்டர் அமைப்புக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (து)

# திருகோணமலை மக்களுக்கு— நிவாரணம் வழங்க நடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் உள்ளிட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங் குவதற்காக திறைசேரியின் ஊடாக வழங்கப்பட்டுள்ள 100 மில்லியன் ரூபா உடனடியாக மக்களை சென்றடைய நடவடிக்கை எடுத்துள்ளதாக திட்ட அமுலாக்கல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

5 மணித்தியாலங்களுக்குள் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.பாதிக்கப்பட்ட மக்களுக்காக திறைசேரி ஊடாக 5 மணித்தியாலங்களில் உடனடியாக ஆயிரம் இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு நிவாரணத்திட்டத்தை மேற்கொள்ள அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

72 மணித்தியாலங்களில் நிவாரணங்களை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்க ளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இந்த விடயத்தில் மிகவும் நேர்மையாக செயற்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதே வேளை, மூதூர் கிழக்குப் பகுதியில் 40 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் அப் பிரதேசத்தில் 16 ஆயிரம் பேர் வரையானவர்களே வசிப்பதாக மாவட்ட செயலாளர் தெரிவித்ததாக கெஹ லிய ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு மே 8,9 ஆம் திகதிகளில்

(கொழும்பு)

மே மாதம் 20 ஆம் திகதி நடத்தப்படவிருக்கும் 22 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மே 8, 9 ஆம் திகதிகளில் இடம்பெறும் என தேர்தல் செயலகம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் அமைந்துள்ள மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவித்துள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் எச்.பி.சிறிவர்த்தன தெரிவித்தார்.

இத் தேர்தல் தொடர்பான வாக்காளர் அட்டைகள் கடந்த வியாழக்கிழமை 28ஆம் திகதி முதல் தபாலகங்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் 27ஆம் திகதி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு ,கம்பஹா, காலி, கல்முனை மாநகர சபைகள் உட்பட 22 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக இத்தேர்தல் கடந்த மார்ச் 30 ஆம் திகதி நடத்தப்படவில்லை.

வடமாகாணத்தில் வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு பிரதேசசபை,கிழக்கில் காத்தான்குடி நகரசபை, கோரளைப்பற்று, ஏறாவூர், நாவிதன்வெளி, பொத்துவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, நித்தவூர் பிரதேச சபைகளும், கல்முனை மாநகர சபையும் முதற்கட்ட உள்ளூராட்சித் தேர்தலின் போது சேர்த்துக்கொள்ளப் படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (த-7)

# ஆசியா பவுண்டேசன் ஆதரவுடன் 33 பிரதேச சபைகள் அபிவிருத்தி

(கொழும்பு)

ஆசியா பவுண்டேசன் நிறுவனம் இலங்கையிலுள்ள 330 உள்ளூராட்சி சபைகளுள் 33சபைகளை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. இதன் கீழ் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, காரைதீவு, நிந்தவூர், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் ஆகிய ஏழு உள்ளூராட்சி சபைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

யூ.எஸ்.எயிட் ஸ்தாபனம் இதற்கு அனுசரணை வழங்குகின்றது. இரு வருட நிகழ்ச்சித் திட்டமான இதில் முதற்கட்டமாக பிரதேச சபைகளும், முகாமைத்துவக் கட்டமைப்பிற்காக கணனி பிரதிபண்ணும் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், தொலைபேசி மேலும் ஈமெயில் இன்டர்நெட் இணைப்புகள் (ஒருவருட காலத்திற்கு)இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச அரசு சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பிரதேச சபைகளுடன் இணைத்து அபிவிருத்தி செய்தலும் ஒரு திட்டமாகும். திட்டத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராக எம்.ஐ.எம்.வலித் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுனாமிப் பாதிப்புக்குள்ளான சபைகளுக்கு 10 இலட்சம் ரூபா முதற் கட்டமாக புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகவும் மேலும் 10இலட்சம் ரூபா ஊழியர்களை ஆறு மாதத்துக்கு பணியில் அமர்த்துவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. (து)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC
## INTERNATIONAL CRICKET COUNCIL

27

### மூன்றாவது விக்கெற் இணைப்பாட்டம்

1457 ஆவது போட்டி. இந்திய கென்ய அணிகள் பிறிஸ்ரல் மைதானத்தில் 23மே 1999 அன்று உலகக்கிண்ணப் போட்டிக்காக மோதுகின்றன.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் இரண்டு விக்கெற் இழப்பிற்கு 329 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை தனது இரண்டாவது விக்கெற்றினை இழந்தது. இதனையடுத்து நான்காம் நிலை வீரராகக் களமிறங்கிய டெண்டுல்கர் களத்தில் நின்ற ராவிட்டுடன் இணைகின்றார்.

இருவரும் இணைந்து இந்திய அணியின் ஓட்டங்களை வெகுவாக அதிகரிக்கின்றனர். 4 பவுண்டரிகள், சிக்ஸர்கள் என மைதானத்தில் நாலாபுறம் பறக்கின்றன.

இருவரும் இணைந்து தமக்கிடையே 237 ஓட்டங்களைப் பகிர்கின்றனர். இவ் இணை இறுதிவரை பிரியவேயில்லை. இப்போட்டியில் ராகுல் ராவிட் 158 நிமிடங்கள் களத்தில் நின்று 109 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகளை விளாசி 104 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் டெண்டுல்கர் 114 நிமிடங்கள் களத்தில் நின்று 101 பந்துகளை எதிர்கொண்டு 16 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 140 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 50 ஓவர்களில் 7 விக்கெற்றினை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்று 94 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியின் நாயகனாக டெண்டுல்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

### நான்காவது விக்கெற் இணைப்பாட்டம்

*போட்டி - 1311
*திகதி - 9 ஏப்ரல் 1998
*முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 3 விக்கெற் இழப்பிற்கு 301 ஓட்டங்கள்
***அஷாருதின், ஜடேஜா 4ஆவது விக்கெற் இணை- 275 ஓட்டங்கள்**
*அஷாருதின் - ஆட்டமிழக்காமல் 153 ஓட்டங்கள் (150 பந்துகள் / 17X4/ 1X6)
*ஜடேஜா- ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்கள் (121 பந்துகள் /6X4/2X6)
*பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 269 ஓட்டங்கள்
*கிராண்ட் பிளவர் (ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்) - 102 ஓட்டங்கள் (118 பந்துகள்/ 8X4)
* இந்தியா 32 ஓட்டங்களால் வெற்றி
* ஆட்டநாயகன் - அஷாருதின்

### ஆறாவது விக்கெற் இணைப்பாட்டம்

* கென்யா எதிர் இலங்கை
* போட்டி- 1469
* திகதி - 30 மே 1999
* உலகக் கிண்ணப் போட்டி -1999
*நாணயச் சுழற்சியில் கென்ய அணி வெற்றி
*முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி 50 ஓவர்களில் 8 விக்கெற்றினை இழந்து 275 ஓட்டங்கள்.
*பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்யா 50 ஓவர்களில் 6 விக்கெற் இழப்பிற்கு 230 ஓட்டங்கள்.
***உடும்பே, வட்கர் இருவரும் இணைந்து ஆறாவது விக்கெற்றுக்காக 161 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.**
*உடும்பே- 82 ஓட்டங்கள் (95 பந்துகள்/ 7X4)
* வட்கர் - ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்கள் (98 பந்துகள்/ 6X4)
*45 ஓட்டங்களால் இலங்கையணி வெற்றி
*ஆட்டநாயகன்- உடும்பே.

### எட்டாவது விக்கெற் இணைப்பாட்டம்

* அவுஸ்திரேலியா எதிர் தென் ஆபிரிக்கா
* போட்டி - 901
* திகதி - 4 ஏப்ரல் 1999
*தென்னாபிரிக்கா நாணயச் சுழற்சியில் வெற்றி
*தென் ஆபிரிக்கா - 50 ஓவர்கள் 6 விக்கெற் இழப்பிற்கு 227 ஓட்டங்கள்
*ஹட்சன்- 63/ றொட்ஸ் 66
*அவுஸ்திரேலியா 49.1 ஓவர்கள்- 201 ஓட்டங்கள்
* **றிவில் மற்றும் ஷேன்வோர்ண் - 8ஆவது விக்கெற் இணை 119 ஓட்டங்கள்**
* வோர்ண்- 55/ றிவில்-58
*26 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி.
*ஆட்டநாயகன் றொட்ஸ்

### பத்தாவது விக்கெற் இணைப்பாட்டம்

*இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியா
*போட்டி- 264
*திகதி - 31 மே 1984
*மேற்கிந்தியா நாணயச் சுழற்சியில் வெற்றி
*மேற்கிந்தியா- 55 ஓவர்கள் -9 விக்கெற் - 272 ஓட்டங்கள்
***விவிலியன் றிச்சர்ட்ஸ்- 189* / (170 பந்துகள்/21X 4/5X6), எம்கோல்டிங்*- 12 இருவரும் இணைந்து 10 ஆவது விக்கெற்றுக்காக 106 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.**
*இங்கிலாந்து- 50 ஓவர்கள்- 168 ஓட்டங்கள் (லாம்ப் - 75)
*104 ஓட்டங்களால் மேற்கிந்தியா வெற்றி.
*ஆட்டநாயகன் - விவிலியன் றிச்சர்ட்ஸ்.

(முற்றும்)



கங்குலி
ராவிட்
சச்சின்
ஜடேஜா
அஷார்

## நோயல்

### இணைப்பாட்டம் - 230 க்கு மேல்

| | | | | |
|---|---|---|---|---|
| 2ND | 331 | ராகுல் ராவிட் & சச்சின் டெண்டுல்கர் | இந் VS நியூ | 1999/00 |
| 2ND | 318 | ராகுல் ராவிட் & சௌரவ் கங்குலி | இந் VS இல | 1999 |
| 4TH | 275 | முஹமட் அஷாருதீன்& அஜெய் ஜடேஜா | இந் VS சிம் | 1997/98 |
| 2ND | 263 | அமீர் சொஹல் & இன்சமாம் உல்- ஹக் | பாக் VS நியூ | 1993/94 |
| 1ST | 258 | சௌரவ் கங்குலி & சச்சின் டெண்டுல்கர் | இந் VS கென்யா | 2001/02 |
| 2ND | 257 | அப்துல் ரஷாக் & சலீம் இலாகி | பாக் VS தென்ஆபி | 2002/03 |
| 1ST | 252 | சச்சின் டெண்டுல்கர் & சௌரவ் கங்குலி | இந் VS இல | 1998 |
| 2ND | 244 | சச்சின் டெண்டுல்கர் & சௌரவ் கங்குலி | இந் VS நமீபியா | 2002/03 |
| 3RD | 237 | ராகுல் ராவிட் & சச்சின் டெண்டுல்கர் | இந் VS கென்யா | 1999 |
| 1ST | 237 | சனத் ஜெயசூர்யா & மார்வன் அத்தப்பத்து | இல VS அவுஸ் | 2002/03 |
| 4TH | 237 | றிக்கி பொண்டிங் & அன்றூ சைமன்ஸ் | அவுஸ் VS இல | 2005/06 |
| 2ND | 236 | ராகுல் ராவிட் & சௌரவ் கங்குலி | இந் VS இல | 1998/99 |
| 1ST | 235 | ஹேர்ஸன் கிப்ஸ் & கெரி கிறிஸ்டன் | தென் ஆபி VS இந் | 1999/00 |

### ஆரம்ப விக்கெற் இணைப்பாட்டம் - சிறப்பான (சராசரி) பெறுபேறு


| வீரர்கள் | போட்டி | இனிங்ஸ் | ஓட்டம் | சராசரி | சதம் | அரைச் சதம் |
|---|---|---|---|---|---|---|
| சச்சின் டெண்டுல்கர் &அஜய் ஜடேஜா (இந்) | 22 | 22 | 1315 | 59.77 | 5 | 7 |
| அடம் கில்கிறிஸ்ட் & சைமன்ஸ் கற்றிச் (அவுஸ்) | 24 | 24 | 1291 | 53.79 | 3 | 7 |
| சி.கிறினீட்ஜ் & டி.கெய்ன்ஸ் (மேற்இந்) | 102 | 102 | 5150 | 52.55 | 15 | 24 |
| அடம்ஸ் கில் கிறிஸ்ட் & மத்தியூ கெய்டின் (அவுஸ்) | 80 | 80 | 3873 | 49.65 | 12 | 19 |
| சௌரவ் கங்குலி & சச்சின் டெண்டுல்கர் (இந்) | 117 | 117 | 5621 | 48.87 | 16 | 21 |
| ஹேர்ஸல் கிப்ஸ் & கெரி கிறிஸ்ரன் (தென் ஆபி) | 66 | 66 | 2838 | 46.52 | 9 | 12 |
| வீரேந்தர் சேவாக் &சச்சின் டெண்டுல்கர் (இந்) | 51 | 51 | 2348 | 46.03 | 9 | 10 |
| எம்.ரெய்லர் & மார்க் வோவ் (அவுஸ்) | 30 | 30 | 1368 | 45.60 | 3 | 7 |
| சனத் ஜெயசூர்யா & மார்வன் அத்தப்பத்து (இல) | 78 | 78 | 3340 | 43.94 | 8 | 19 |
| அண்டி பிளவர் & கிராண்ட் பிளவர் (சிம்) | 33 | 33 | 1350 | 42.18 | 5 | 5 |

# நெல்சன் மண்டேலா

**த. பாண்டியன்**

## மீள்பார்வை

### அழுதூட்டிய தாய் 31


சிறைச்சாலையில் மண்டேலா

தொண்டர்களே கட்டுப்பாட்டுடன் இருங்கள். பலாத்காரச் செயலில் ஈடுபடாதீர்கள் என்றால் ஈடுபடமால் இருக்கவும் அதேபோன்று தொண்டர்களை வன்முறையில் ஈடுபடுங்கள் என்றால் கொலை, கொள்ளை என்றாலும் சேர்ந்தே நிற்க வேண்டும் என்பது தான் ரேசா ஆற்றிய உரை. இதை வைத்து வன்முறையைத் தூண்டியதற்கான ஆதாரம் காட்டப்பட்டு விட்டதாக அரசு தரப்பு நம்பியது.ஆனால் முன்னும் பின்னும் ஆற்றிய முழு உரையுடன் கேட்டபோது அது ஒரு அழுத்தம் கொடுக்கக் கூறப்பட்ட இரண்டு வரிகள் என்பதும், அவர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அமைதி வழிக் கொள்கையைத் தான் வலியுறுத்தியிருக்கிறார் என்பதும் தெரிந்தது.

போராளிகள் தரப்பு சாட்சிகள் கூண்டில் ஏறத் தொடங்கின. முதலில் டாக்டர் கோங்கோ ஏற்றப்பட்டார். இவர் விட் பல்கலைக்கழகத்தில் பயின்று வெள்ளையரை விட அதிக மதிப்பெண்களுடன் தேறி புகழ் மிக்க டாக்டராக ஆனவர். இவர் சூலு இன விவசாயி மகன். இவரது வாழ்க்கை விபரங்களைக் கூறியபோது இந்த அளவு அறிவு ஆற்றலைக் கொண்ட மாமனி தர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட இயக்கம் கலவரக் கும்பலாக இருக்கமுடியாது என நீதிபதிகள் நினைப்பது முகத்தில் தெரிந்தது.

இவரையடுத்து தலைவர் லுதுலி சாட்சியம் தந்தார்.

மகாசாசனம் கம்யூனிசத் தன்மை கொண்டது எனவும், ஆபிரிக்க தேசியக் காங்கிரஸில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பது உண்மையே என அவரது வாயால் சொல்ல வைக்க அரசு பெரும்பாடுபட்டுத் தோற்றது. லுதுலி, நிதானம் தவறாமல் உறுதியாகப் பதில் தந்தார். அமைதி வழிப் போராட்டமே என உறுதிசெய்தார். லுதுலியை தென்னாபிரிக்க மகாத்மா காந்தி என உறுதி செய்தார். லுதுலியை தென்னாபிரிக்க மகாத்மாகாந்தி என மக்கள் அழைத்தனர். லுதுலி சாட்சியம் தொடர்ந்து கொண்டு இருந்த போது 1959 மார்ச் 21 அன்று ஆபிரிக்கக் கண்டத்தையே குலுக்கிய பூமி அதிர்ச்சி ஏற்பட்டு விசாரணை நிறுத்தப்பட்டது. பல வாரங்களுக்குப் பின்னர் விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது.

லுதுலி ஒரு கிறிஸ்துவர் . எனவே எல்லா இனக் குழுக்களையும் ஒருங்கிணைப்பதே ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நோக்கம் என்பதை அவர் விளக்கியது நீதிமன்றத்தைக் கவர்ந்தது போலத் தோன்றியது அவர் விவிலிய மேற்கோள்களைக் காட்டி நீதிபதிகளைத் திணறடித்தார்.

### அனுமதிச் சீட்டு எரிப்பு

1959 டிசம்பரில், டர்பனில் கூடிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மாநாட்டில் , ஆபிரிக்கர்களுக்கான அனுமதிச் சீட்டுப் பெற வேண்டும் என்ற சட்டத்தை எதிர்த்து, அனுமதிச் சீட்டை எரிக்கிற போராட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி 1960 மார்ச் 31 முதல் பல நகரங்கள், கிராமங்களில் அனுமதிச்சீட்டை எரிப்பது, அனுமதிச் சீட்டு வழங்கும் அலுவலகத்தை முற்றுகையிடுவது, இறுதியாக ஜூன் 26ஆம் நாள் பெருமளவில் அனுமதிச் சீட்டுக்களை சொக்கப்பான் கொளுத்தி விடுவது என முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது.

சுத்த ஆபிரிக்க காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் இல்லாத குழுவாக இயங்கி வந்தனர்.இவர்கள் மார்ச் 21 அன்று அனுமதிச் சீட்டு எரிப்பு போராட்டம் நடக்கும் என அறிவித்தனர். இது மக்களின் உரிமைகளைக் காக்க வேண்டும் என்ற ஆவலில் பிறந்த முழக்கம் அல்ல. ஆபிரிக்கக் காங்கிரஸை முந்திக் காட்ட வேண்டும். இயக்கத்தை , மக்களைப் பிளவு செய்ய வேண்டும் என்ற சந்தர்ப்ப வாத , வாய்ச் சவடால் வேலைதான்.

மார்ச் 21க்கு முன்னர், 17ஆம் திகதி ஆபிரிக்கக் காங்கிரஸையும் போராட்டத்தில் கலந்து கொள்ள சுத்தஆபிரிக்க காங்கிரஸின் தலைவர் சோபுக்வே அழைப்புவிட்டார். இதுவும் கண்துடைப்பு வேலைதான். தேசிய காங்கிரஸ் இதை நிராகரித்தது.

சோபுக்வேயும், நிர்வாகக் குழு உறுப்பினர்களும் ஆர்லண்டோவிலிருந்த அனுமதிச்சீட்டு வழங்கும் அலுவலகத்திற்குச் சென்று மறியல் செய்து கைதாகினர். அதே தினத்தில் பல நகரங்களில் இவர்களது போராட்டத்திற்கு மக்கள் திரளவில்லை.

சோபுக்வே கைதுசெய்யப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில், "நாங்கள் வாதிடமாட்டோம். ஜாமீன் கேட்கமாட்டோம். அபராதம் கட்டமாட்டோம்" எனக் கூறினார். நீதி மன்றம் ஓரிரு வார தண்டனை வழங்கும் என அவர் எதிர்பார்த்தார். ஆனால் மூன்றாண்டுத் தண்டனை வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பல ஊர்களில் கண்டன மறியல் நடந்தது. இதில் தொழிலாளர்கள் நிறைந்த சார்ப்பவில்ளையில் பல்லாயிரம் பேர் திரண்டனர். காவல் நிலையத்தில் 75பேர் தான் இருந்தனர். அவர்கட்கு மக்களைக் கண்டு பயம். எனவே முன் அறிவிப்பு இன்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.அறுபத்தி ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.700பேர் படுகாயம் அடைந்தனர். முதல் தடவையாக அமெரிக்க அரசும் இந்தக் காட்டுமிராண்டிச் செயலைக் கண்டித்தது. ஐ.நா. பாதுகாப்பு சபையும் கண்டித்தது. இங்கிலாந்தின் பிரதமர் மாக் மில்லன், ஆபிரிக்காவில் புதுக் காற்று திசைமாறி வீசுவதாக வருணித்தார்.இந்த நிகழ்ச்சிகளை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பார்த்துக்கொண்டு இருக்கமுடியுமா ? தொடங் கியது. வேறு ஒரு கட்சியாக இருந்தாலும் படுதுயருக்கு ஆளானவர்கள் மக்காளயிற்றே! எனவே ஆபிரிக்க காங்கிரஸின் தலைவர்கள் கூடி விவாதித்தனர்.

போராட்டத்தை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டது. மார்ச் 26ஆம் நாளன்று தலைவர் லுதுலி அனுமதிச் சீட்டை பிரிட்டோரியாவில் எரித்தார். ஆயிரக்கணக்கில் அனுமதிச் சீட்டுக்கள் கொளுத்தப்பட்டன. கேப் நகரத்தில் ஐம்பதாயிரம் மக்கள் கண்டனப் பேரணியில் திரண்டனர். நாடு முழுவதும் கோபத்தீ கொளுந்து விட்டெரிந்தது. இத்தகைய மக்கள் எழுச்சியை நாடு பூராவிலும் அமைப்பு வடிவில் இயங்கிய ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸினால் தான் செய்ய முடியும் என்பது புலனாயிற்றே.

அரசோ நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தது. நள்ளிரவில் மண்டேலா கைதானார். காவல் நிலையம் சென்றபோது அங்கு ஏற்கனவே பல சக போராளிகள் கைதாகியிருந்தனர்.

ஒரு சிறிய அறையில் பலரையும் போட்டு அடைத்தனர். விரிப்பு, குடிதண்ணீர் , கழிவறை எதுவும் கொடுக்கப்படவில்லை. உணவும் தரப்படவில்லை. தரப்பட்ட கம்பளியில் காய்ந்து உறைந்த ரத்தம், வாந்தியெடுத்த வடுக்கள்... வருணிக்க முடியாத நாற்றம்.அசிங்கங்கள். எல்லோரும் அறைக்கு வெளியில் வந்து நின்றிருந்தனர். ஒரு சிறை அதிகாரி, உள்ளே போகாவிட்டால் சுட்டுத் தள்ளப் போவதாக உறுமினான். யாரும் அசையவில்லை. சார்ப்பவிள்ளைக்குப் பின் அது வெறும் மிரட்டல் அல்ல என்பதும் தெரியும். மண்டேலா கால்சட்டைப் பைகளுக்குள் கைகளை விட்ட வண்ணம் நின்றிருந்தார். கமாண்டர் கோபத்தோடு வந்து "ஒரு அதிகாரி முன்னால் கையைப் பைக்குள் போட்டா நிற்கிறாய்! எடு" எனக் கத்தினான்.

"சாப்பாடு வந்தால் த சாப்பிட மட்டும் கையை எடுப்பேன் அதுவரை அவை அங்கே தான் இருக்கும்" என்றார் மண்டேலா.சிறிதுநேரம் கழிந்து சோளக்கூழ் வந்தது. அதைக் கொண்டு வந்த பாத்திரம் அழுக்கேறி இருந்தது. பார்க்கவே அருவருப்பு.இருந்தாலும் பசியாக இருந்ததால் எல்லோரும் சாப்பிட்டார்கள்.நள்ளிரவு ஒரு மணிக்கு ஒரு அதிகாரி வந்து, கொட்டிக் கதவைத் திறந்து முன் பக்க வாசலுக்குப் போகச் சொன்னார். ஒரு அதிகாரி உனக்கு விடுதலை என்பார். (தொடரும்)

## ஊடகவியலாளர்களுக்கான மொழி அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சிநெறிகள்

(கொழும்பு)

ஊடகவியலாளர் மொழியை முறையாகக்கையாலும் வகையில், நாடளாவிய ரீதியில் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாக தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி. கணேகல தெரிவித்தார்.

கடந்த ஒன்றரை வருடகால மாக ஊடகவியலாளர்களுக்குள்ள பொறுப்புத் தொடர்பாக 16 மாவட்டங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் ஏனைய மாவட்டங்களிலும் இப் பயிற்சி நெறிகளை நடத்து வதுடன், மொழியை சரியாகக் கையாள்வதற்கான பயிற்சிகளும் வழங் கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சு மற்றும் தகவல் திணைக்களம் இணைந்து நடாத்தும் சரியான சிங்கள மொழி பிரயோகம் தொடர்பான ஊடகவியலாளர் பயிற்சி நெறி கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடை பெற்றது.

இலங்கையின் தலைசிறந்த பேராசிரியர்கள், கல்விமான்கள் பங்கேற்ற இப் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் மிகுந்த பொறுப்புள்ளவர்கள். காலையிலிருந்து இரவு வரை சகல மக்களுக்கும் தகவல்களை வழங்குகின்றவர்கள் இவ்வகையில் இலங்கையின் அடையாளத்தை வெளிக் கொணரும் வகையில், சிங்கள மொழி உரியவகையில் மிகச் சரியாக உபயோகிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய சிரேஷ்ட விரிவுரையாளர் ரத்னசிறி அரங்கல, நாம் மேல்நாட்டு உடை, உணவு , கலாசார மோகத்திலேயே வாழ்கிறோம். நமக்கான அடையாளத்தை, கலாசாரத்தை, பண்புகளை ஒரு புறந்தள்ளி வாழ்கிறோம்.

மொழி என்பது நமக்கான சிறப்புரிமை. சில ஊடகங்கள் 5ஆம் வகுப்புப் பிள்ளைகளைப் போல பிழைவிடுகின்றன. இதனைச் சரி செய்யும் வகையிலேயே இத்தகைய பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார். (து-7)

## சைவசித்தாந்த பிரவேச/பால/பண்டிதர் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவபரிபாலன சபையால் நடாத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச/ பால/பண்டிதர் தேர்வுகள் எதிர்வரும் மே மாதம் 5, 6, 7ஆம் திகதிகளில் யா/வண்.நாவலர் மகா வித்தியாலயம், மட்/வின்சன்ற் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை (மட்டக்களப்பு) ,பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி (கொழும்பு) ஆகிய இடங்களில் நடைபெறும்.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள நேரசூசி , சுட்டிலக்கம் என்பன ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிடைக்காதவர்கள் 66, கல்லூரி வீதி, நீராவியடி , யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளலாம். (து)

## கொழும்பில் தொடரும் தேடுதல் வேட்டை

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதனை சுற்றியுள்ள பிரதேசங்களிலும் கடந்த சில நாட்களாக பாதுகாப்பு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தக் கைது நடவடிக்கைகள் இடம்பெற்றுள் ளது.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் விசாரணைகளின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், பலர் இன்னும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள் ளது. (து-9)

## மருத்துவ அதிகாரிகள் சம்பள சுற்றறிக்கை

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகளுக்கான சம்பளம் குறித்த 2006ஆம் ஆண்டு சுற்றறிக்கையை அமுல்படுத்த இறுதியாக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மருத்துவஅதிகாரிகள் சங்க செயலாளர் வைத்திய கலாநிதி உதித்த ஹேரத் இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கை யில்,

தொடர்ச்சியாக இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னரே இந்தச் சுற்றறிக்கை தற் சமயம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றார். (து-9)

## நெடுங்கேணி தாக்குதலில் உதவிப்படை வீரர் மரணம்

வவுனியா மாவட்டம் நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற இலங்கைப் படைகளின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலின் போது உதவிப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார் எனத் தெரிகிறது.

கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றது.

வீரச்சாவடைந்த பொன்னுத்துரை மோகனதாசன் என்றழைக்கப்படும் இந்த உதவிப் படைவீரர் குஞ்சுப்பரந்தன் 3 ஆம் கட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும் மாயவனூர் வட்டக்கச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டவராவார். (து)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் 6ஆம் ஆண்டு நிறைவையொட்டி மே மாதம் 3, 4, 5, 6, 8ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நினைவுச் சொற்பொழிவுகளும், 9ஆம் திகதி நடைபெறவிருந்த சான்றோர் கௌரவிப்பும் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என பீடாதிபதி தெரிவித்துள்ளார். (து)

## பழைய நேரப்படியே இயங்கும் பாடசாலைகள்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகளில் முன்னர் நடைமுறையிலிருக்கும் நேரப்படியே பாடசாலைகள் ஆரம்பமாகி வருகின்றன என்றும் படகுப் பாதை சேவைநேரமும் மற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து-72)

## மண்டபத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத் திறப்புவிழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நயினாதீவு தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நயினாதீவு தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ச.பரஞ்சோதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலாளரும், அரச அதிபருமான க.கணேஷும், முதன்மை சிறப்பு விருந்தினர்களாக நியாப் திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் க.பாலகிருஷ்ணன் மற்றும் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் .(து-9)

# 1950 ஆம் ஆண்டு நான்காவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

| திகதி | கிண்ணம்வென்ற நாடு | இரண்டாவது இடம் | 3ஆவது இடம் | நடாத்திய நாடு |
|---|---|---|---|---|
| ஜூன் 24 - ஜுலை16 | உருகுவே | பிரேசில் | சுவீடன் | பிரேஸில் |

இரண்டாவது உலகப்போர் காரணமாக 1942, 1946 ஆகிய ஆண்டுகளில் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவில்லை. நான்காவது உலகக் கிண்ணப் போட்டிகள் 1950 ஆம் ஆண்டு தான் பிரேஸிலில் நடைபெற்றது.

இரண்டாவது உலகப்போரில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் காட்சிப்பெட்டியை இத்தாலி நாட்டவரும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மோளனத்தின் பதில்த் தலைவருமான கலாநிதி ஒட்டோ ரினோ பாரஸ்ஸி என்பவர் ஆக்கிரமிப்புப் படைகளிடம் இருந்து பாதுகாப்பதற்கு தனது படுக்கையினுள் பாதுகாத்து வைத்திருந்ததாராம்.

உலகக்கிண்ண போட்டிகளிற்கு பல அணிகள் தெரிவாகி இருந்த போதிலும் 13அணிகளே இறுதியாகச் சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றியது இந்திய அணி தகுதிபெற்ற போதிலும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் விதிகளுக்கு அமையும் வகையில் காலணி அணியாமல் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமல் வெளியேறியது.

முதல் லீக் போட்டிகளில் வெற்றி பெற்று பிரேஸில், சுவீடன், ஸ்பெயின் மற்றும் உருகுவே ஆகிய அணிகள் இறுதி சுற்றுப் போட்டிகளிற்கு தெரிவாகின.

இறுதிப் போட்டியில் போட்டியை நடாத்திய நாடான பிரேஸில் முன்னாள் உலகக் கிண்ண வெற்றியாளன் உருகுவேயைச் சந்தித்தது. பிரேஸிலின் றியோஸ் மரஹானா மைதானத்தில் 174,000 ரசிகர்களின் ஆரவாரத்துடன் நடைபெற்ற இறுதிப்போட்டியில் பிரேஸிலை 2-1 என்ற கோல் கணக்கில் உருகுவே வெற்றி பெற்று இரண்டாவது முறையாக உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

### இரண்டாவது உலகப்போருக்கு பின்னர் நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்டம்

இரண்டாவது உலகப்போர் நிறைவடைந்த பின்னர் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாக சபைக்கூட்டம் 1946ஆம் ஆண்டு ஜுலை 25 ஆம் திகதி லக்ஸேம் போக்கில் நடைபெற்றது.

R.U.பாலமுருகன்


இக் கூட்டத்தில் இதற்கு முன்னர் நடைபெற்ற போட்டிகளில் வழங்கப்பட்ட உலகக் கிண்ணமான யூல்ஸ் நிமெற் கிண்ணம் இடைநிறுத்தி சர்வதே உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கிண்ணம் (பிபா) கிண்ணம் வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், நான்காவது உலகக் கிண்ணத்தை பிரேஸிலின் புகழ் பெற்ற மைதானமான மரஹானா மைதானத்தில் புதிய பிரமாண்டமான அரங்கு அமைத்து 1950 ஆம் ஆண்டு ஜீன் 24 ஆம் திகதி தொடக்கம் ஜுலை மாதம் 16ஆம் திகதி வரை நடாத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

### பிரமாண்டமான அரங்கு அமைக்கப்பட்டது

உலகக்கிண்ணத்தை நடாத்த பொறுப்பேற்ற பிரேஸில் புகழ் பெற்ற மைதானத்தில் மிகப் பெரிய அரங்கு அமைக்கும் பணியையும் 1948 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் திகதி ஆரம்பித்தது.

உலகக்கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் அரங்கு அமைக்கும் பணிகள் நிறைவடைய வேண்டுமென வேலைகள் மும்மரமாக நடைபெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட பிரமாண்டமான (220,000 ரசிகர்கள் அமர்ந்து ரசிக்கக் கூடிய) அரங்கு 1950 ஆம் ஆண்டு ஜுன் 24ஆம் திகதி. இத்தாலியின் உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவரும் 1934 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை நடாத்துவதற்கு ஒழுங்கமைப்பாளராகவும் செயற்பட்ட கலாநிதி ஓட்டோரினோ பராஸ்ஸி திறந்து வைத்தார்.





**இறுதிச் சுற்றுப் போட்டி முடிவுகள்**

| | | |
|---|---|---|
| பிரேஸில்7 | எதிர் | சுவீடன் 1 |
| உருகுவே2 | எதிர் | ஸ்பெயின்1 |
| பிரேஸில் 2 | எதிர் | ஸ்பெயின்1 |

**முதல் சுற்றுப்போட்டிகளின் முடிவுகள்**

| குழு ஏ | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை |
|---|---|---|---|---|
| பிரேஸில் | 3 | 2 | 0 | 1 |
| யூகோஸ்லாவியா | 3 | 2 | 1 | 0 |
| மெக்சிக்கோ | 3 | 1 | 1 | 1 |
| குழு பி | | | | |
| ஸ்பெயின் | 3 | 3 | 0 | 0 |
| இங்கிலாந்து | 3 | 1 | 2 | 0 |
| சிலி | 3 | 1 | 2 | 0 |
| அமெரிக்கா | 3 | 1 | 2 | 0 |
| குழு சீ | | | | |
| சுவீடன் | 2 | 1 | 0 | 1 |
| இத்தாலி | 2 | 1 | 1 | 0 |
| பராகுவே | 2 | 0 | 1 | 1 |
| இந்தியா | 0 | 0 | 0 | 0 |
| குழு டி | | | | |
| உருகுவே | 1 | 1 | 0 | 0 |
| பொலிவியா | 1 | 0 | 1 | 0 |
| துருக்கி | 0 | 0 | 0 | 0 |
| ஸ்கொட்லாண்ட் | 0 | 0 | 0 | 0 |

**மூன்றாவது இடத்திற்கான போட்டி முடிவு**

| | | |
|---|---|---|
| சுவீடன்3 | எதிர் | ஸ்பெயின்1 |

**இறுதிப்போட்டி முடிவு**

| | | |
|---|---|---|
| உருகுவே2 | எதிர் | பிரேஸில்1 |

(வளரும்)

# சர்வதேச அழுத்தம் காரணமாக ஹமாஸ் இயக்கத்தின் நிலையில் தளர்வு

## பலஸ்தீனிய பிரச்சினையில் மாற்றம் ஏற்படுமா?

சர்வதேச ரீதியாக தனிமைப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக இஸ்ரேல் தொடர்பான தனது கடும் நிலைப்பாட்டில் தளர்ச்சிப்போக்கை கைக்கொள்வது பற்றி ஹமாஸ் தலைமையிலான பலஸ்தீன அரசு ஆராய்ந்து வருகிறது.

இப்படிச் செய்வதற்காக சர்வதேச சமூகத்திடமிருந்தும், இஸ்ரேலிடமிருந்தும் ஹமாஸ் சலுகைகளை எதிர்பார்க்காமல் இருக்கப்போவ்தில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரச சமாதான முன்முயற்சிகள், இஸ்ரேல் - பலஸ்தீன நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஐ.நா.தீர்மானங்கள் மற்றும் பலஸ் தீன விடுதலை அமைப்பின் தேசிய நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றின் அடிப்படையில் தளர்ச்சிப் போக்கைக் கடைப்பிடிப்பது குறித்து ஹமாஸ் ஆராய்வது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய தீர்மானங்கள் திட்டங்கள் என்பவற்றில் இஸ்ரேலை அங்கீகரிக்கும் விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலைப்பாட்டில் தளர்ச்சியை ஏற்படுத்துவது என்பது ஹமாஸின் சித்தாந்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது ஆகாது என நிபுணர் ஒருவர் கூறினார்.

பலஸ்தீன அதிகார சபைக்கான நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் ஜனாதிபதி அப்பாஸுடன் ஏற்பட்டுள்ள பிளவை நீக்கவும், இதன்மூலம் ஹமாஸ் முயல்வதாகவும் அவர் கூறினார்.

ஹமாஸில் செல்வாக்கு மிக்கத் தலைவரான இவர் பிரதமர் இஸ்மாயில் ஹனியாவுடனும் நெருக்கமானவராவார்.

அரபு சமாதான முன்னெடுப்புகள் குறித்தும் ஆராயவுள்ளதாகக் கூறிய மத விவகார அமைச்சர் நாயஃப் அல் ரஜுப் அவ்வாறு கூறியதன் அர்த்தம் அதிலுள்ள சகல விடயங்களும் எம்மால் ஏற்கப்படும் என்பதல்ல என்றார்.

1967ஆம் ஆண்டு மத்திய கிழக்குப் போரில் இஸ்ரேல் கைப்பற்றிய இடங்களை விட்டுக்கொடுத்தால் இஸ்ரேலுடன் சமாதானமாக இருக்க முடியுமென அரபு சமாதான முன்னெடுப்புகள் தெரிவிக்கின்றன. (து-7)

# ஆசிய மாகாணத் தேர்தலில் கலந்துகொள்ள முன்னாள் தீவிரவாதிகள் முடிவு

ஆசிய மாகாண தேர்தலில் இந்தோனேஷியாவின் முன்னாள் தீவிரவாதிகள் போட்டியிடவுள்ளனர். எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடத்துவதற்கு உத்தேசித்துள்ள ஆசிய மாகாண தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ளதாக முன்னாள் தீவிரவாதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலையினால் ஆசிய மாகாணம் பெரும் பாதிப்புக்குள்ளாகியதைத் தொடர்ந்து இந்தோனேஷிய அரசாங்கத்துக்கும், ஆசியத் தீவிரவாதிகளுக்குமிடையில் சமாதான உடன்படிக்கைசெய்து கொள்ளப்பட்டது. இதனையடுத்து ஆசிய மாகாணத்தில் தேர்தல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்தோனேஷியப் பாராளுமன்றத்தில் அடுத்த மாதம் இது தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே ஆசிய மாகாணத்தில் தேர்தல் நடத்தப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

மூன்று தசாப்த காலமாக ஆசிய மாகாணத்தில் இடம்பெற்று வந்த மோதல்கள், பின்லாந்து அரசாங்கத்தின் ஏற்பாட்டில் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையின் மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

ஆசிய மாகாணத்தில் இந்தோனேஷியப் படையினர் அமைதியாகப் பணிகளை மேற்கொள்வதாகவும், ஆசிய மக்கள் நிம்மதியுடன் வாழ்வதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை ஆசிய மாகாண முன்னாள் தீவிரவாதிகள் தே..தலில் போட்டியிட முன்வந்துள்ளமை, அவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் பிரவேசிப்பதை எடுத்துக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள். (து-7)

### சீனா செலுத்திய செயற்கைக் கோள்

அறிவியல் ஆராய்ச்சிக்காக ஒரு செயற்கைக்கோளை சீனா கடந்த வியாழக்கிழமை விண்ணில் செலுத்தியது 2 ஆயிரத்து 700 கிலோ எடையுள்ள யாவோகான் -1 என்ற இந்த செயற்கைக்கோள் லோங் மார்ச் 4 பி என்ற றொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. நிலவளங்களை ஆய்வு செய்வது, பயிர் விளைச்சலை மதிப்படுவது பேரழிவுகளை முன்கூட்டியே அறிவிப்பது ஆகிய பணிகளுக்கு இந்தச் செயற்கைக்கோள் பயன்படுத்தப்படும்.

கடந்த 2003 ஆம் ஆண்டு சீனா விண்ணுக்கு முதல் தடவையாக மனிதனை அனுப்பி சாதனை புரிந்தமை குறிப்பிடத்தக்கது. (து-7)



ஒரு பொண்ணு ஒரு பையன்
ரூபா

'சாமி' படத்துக்குப் பிறகு திரிஷா மீண்டும் 'பீமா' படத்தில் விக்ரமுடன் ஜோடி சேருகிறார். லிங்குசாமி இயக்கும் இதில் 'எனக்கு நல்ல வேடம் கிடைத்திருக்கிறது' என்று சந்தோஷப்படுகிறார் திரிஷா.

* * *

நடிகர் பிரகாஷ்ராஜ் தயாரிக்கும் 'மொழி' வித்தியாசமான கதை அம்சம் கொண்ட படம். இந்தப் படத்தின் மூலம் ஜோதிகா முதன் முதலாக பிருதிவிராஜுடன் ஜோடி சேர்ந்து இருக்கிறார். படத்தில் ஜோதிகா ஒப்பனை இல்லாமல் நடிக்கிறார்.

* * *

## பிஸியான கருணாஸ்

'ஈ', 'பொறி', 'தகப்பன் சாமி', 'திருவிளையாடல்', 'நினைத்து நினைத்து பார்த்தேன்', 'முதல்கனவு' ஆகிய படங்களில் நடித்துவரும் கருணாஸ் 'மெர்க்குரி பூக் கள்' படத்துக்குப் பின் பிஸியாகிவிட்டார். ஏகப்பட்ட பட வாய்ப்புக்கள் வந்து குவி கின்றன. படங்களைத் தேர்வு செய்து கரு ணாஸ் ஒப்புக் கொள்கிறார்.

## சினிமாவுக்காக காதலியை இழந்தேன்; ஆர்யா மனம் திறக்கிறார்



உள்ளம் கேட்குமே படத்தின் மூலம் தமிழ்ப் பட உலகில் காலடி எடுத்து வைத்தவர் ஆர்யா.

இந்தப் படம் வெளியாவதற்கு முன்பே இவர் நடிப்பில் வெளிவந்த 'அறிந்தும் அறியாமலும்' படம் இவருக்குத் தனி அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தது.

ஒரு கல்லூரியின் கதையில் வித்தியாசமான வேடம் ஏற்றார். அடுத்து 'கலாபக்காதலன்', 'பட்டியல்' படங்கள் திரைக்கு வருகின்றன. கவுதம்மேனன், ஜீவா போன்ற பிரபல டைரக்டர்களே இவரை வைத்துப் படம் எடுக்கத் தயாராக இருக்கிறார்கள். தமிழ்ப் பட உலகின் முக்கிய கதாநாயகர்கள் வரிசையில் இடம்பிடித்துள்ள ஆர்யாவிடம் அவர் கடந்து வந்த பாதை பற்றி கேட்டபோது...

'என் அப்பா ஹோட்டல் வைத்து நடத்துகிறார். படிப்பதற்காக கேரளாவில் இருந்து வந்தேன். ஆரம்பத்தில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் தெரியாது. உலகம் அறியும் விளையாட்டு வீரனாக பெயர் வாங்கவேண்டும் என்பதே எனது இலட்சியமாக இருந்தது.

விளையாட்டில் நான் காட்டிய ஆர்வம் காரணமாக இத்தாலியில் நடந்த 'அதலெட்டிக்' பயிற்சியில் கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். 10 ஆவது வகுப்புப் படிக்கும்போதே பாக்கெட் மணிக்காக மாடலிங் செய்யத் தொடங்கினேன்.

கல்லூரியில் படித்தபோது மாடலிங்கில் தனிக் கவனம் செலுத்தினேன். என்றாலும் அப்போது எனக்குச் சினிமா பற்றி எந்த எண்ணமும் இல்லை. என்னுடன் மாடலிங் செய்த பெண்கள் அனைவரும் சினிமா கனவுகளுடனேயே இருந்தார்கள். அவர்களின் தூண்டுதலால் எனக்கும் சினிமாவில் நடிக்கும் ஆசை வந்தது.


இதற்கிடையே என்ஜினியரிங் படிப்பை முடித்துச் சென்னையில் உள்ள ஒரு சாப்ட்வேர் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். அப்போது இடை இடையே சினிமா கம்பெனிகளுக்குச் சென்று நடிக்க சான்ஸ் கேட்டேன். டைரக்டர் ஜீவாவைச் சந்தித்தேன். அவர் 100 பேருக்கு ஸ்கிரீன் டெஸ்ட் நடத்தினார். அதில் நான் தேர்வு பெற்றேன்.

6 மாதத்தில் முடிய வேண்டிய எனது முதல் படம் 3 வருடங்களாக வெளிவரவில்லை. இந்த நேரத்தில், எனக்கு வேலைக்காக அமெரிக்கா செல்ல வாய்ப்புக் கிடைத்தது. என்றாலும் நான் நடித்த படத்தை முடித்துக்கொடுக்காவிட்டால் பலர் பாதிக்கப்படுவார்கள் என்பதால் அமெரிக்கா போகவில்லை.

கல்லூரியில் படித்தபோது எனக்கும் காதல் அனுபவம் ஏற்பட்டது. என்னை ஒரு பெண் விரும்பினாள். நானும் காதலித்தேன். படிப்பு முடிந்த பிறகு கிடைத்த வேலைக்குச் சரியாக செல்லாமல், வெளிநாட்டு வேலை வாய்ப்பையும் தள்ளி வைத்துவிட்டு முதல் படம் வெளிவருவதை எதிர்பார்த்து அந்தக் க[illegible]லேயே இருந்தேன். எத்தனை வருடங்கள்தான் அவள் எனக்காகக் காத்திருப்பாள் என் காதலி வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொண்டாள். காதலையும் காதலியையும் தியாகம் செய்துவிட்டு சினிமாவில் நல்ல நேரத்துக்காகக் காத்திருந்தேன். அது வீண்போகவில்லை.

'கலாபக் காதலன்' படப்பிடிப்பின் போது நடிகர் விக்ரம் தனது குழந்தைகளுடன் அங்கு வந்தார். 'என் குழந்தைகள் உங்கள் விசிறிகள்' என்று சொன்னபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.


ரசிகர்களிடம் நல்ல நடிகன் என்று பெயர் வாங்க முடிந்தவரை உழைக்கிறேன். நல்ல இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது... என்றார் ஆர்யா.



'திருப்பதி'
அஜீத்குமார் – சதா

## மெர்க்குரி பூக்கள்

### திரை விமர்சனம்



திருமணத்துக்குப் பிறகு மனைவியை மனம் விரும்பி காதலிக்கும் இளைஞனின் கதை.

சென்னையைச் சேர்ந்த அந்த இளைஞன் வேலை பார்த்துக் கொண்டே கல்லூரியில் படிக்கிறான். அங்கு பணக்கார பெண்ணைக் காதலிக்கிறான். அவளைத் திருமணம் செய்து கொள்ளும் கனவில் மிதக்கிறான்.

இந்த நிலையில் அவனுக்குக் கிராமத்துப் பெண்ணைத் திருமணம் செய்து வைக்கப் பெற்றோர் முடிவு செய்கிறார்கள். முதலில் மணக்க மறுக்கும் அவன் பெற்றோர் விருப்பத்துக்காக அவளை திருமணம் செய்து கொள்கிறான்.

நிறையப் படிக்க வேண்டும் என்று விரும்பும் அந்தப் பெண்ணும், வேண்டா வெறுப்புடன் திருமணம் செய்துகொள்ள சம்மதிக்கிறாள். திருமணத்துக்குப் பிறகும் அவள் கல்லூரிக்குப் போகிறாள். என்றாலும், கணவன் – மனைவி இருவரும் குடும்ப உறவைத் தள்ளி வைக்கிறார்கள். கணவன் மனைவியைக் குறை சொல்கிறான். மனைவி கணவனைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறாள்.

மீண்டும் கல்லூரி காதலியைச் சுற்றி வரும் அந்த இளைஞன் அவளுடைய ஆடம்பர நடவடிக்கையால் வெறுப்பு அடைந்து மனைவியை நேசிக்கத் தொடங்குகிறான். அவளும் கணவனின் அரவணைப்புக்கு ஏங்குகிறாள். மனைவியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று அவன் முடிவு செய்யும்போது அவள் கணவனிடம் சொல்லாமல் சொந்தக் கிராமத்துக்குப் போய் விடுகிறாள்.

அவளைச் சமாதானம் செய்து சென்னைக்கு அவன் அழைத்து வரும்போது அவனுடைய தந்தை எங்களிடம் சொல்லாமல் ஊருக்குப் போனவளுடன் நீ வீட்டுக்குள் வரக்கூடாது என்கிறார். முடிவு என்ன என்பதை உணர்ச்சி பொங்க சொல்லியிருக்கிறார்கள்.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த சென்னை வாலிபராக ஸ்ரீகாந்த். காதல் கனவு, கல்லூரி ஜாலி என்று கலகலப்பான வேடம்.



திருமணத்துக்குப் பிறகு மனைவியிடம் முறைத்துக் கொள்வது யதார்த்தம். கிராமத்துக்குச் சென்று மனைவியிடம் அசடு வழிவதும், பஸ்ஸில்செய்யும் இடக்கு முடக்கான சேட்டையும் லொட்ஜில் தங்குவதற்கு சென்று படும் பாடும் ஸ்ரீகாந்தின் தனி முத்திரை. மீரா ஜாஸ்மினுடன் போட்டி போட்டு நடித்திருக்கிறார். உச்சக்கட் டம் உணர்ச்சிப் பிழம்பு.

ஸ்ரீகாந்த் ஜோடியாக மீராஜாஸ்மின். அவருக்குப் பொருத்தமான கலாட்டா வேடம். தியேட்டம் கலாட்டா சண்டைக் கோழியின் மறுபிரதி. கணவருடன் முறைத்துக் கொள்வதும், பின்னர் லோசாகச் சிரித்துக் கொள்வதும் ரசனை. சின்னச்சின்ன குறும்புகளுக்கு இடம்கொடுத்து விட்டுப் பின்னர் கோபப்படுவது நடைமுறை அனுபவ ரசனை. உருக்கம், நெருக்கம், கோபம், மகிழ்ச்சி என்ற நவரசங்களை முக பாவத்தில் கொண்டு வந்து தேசிய விருது பெற்ற காரணத்தைச் சொல்லாமல் சொல்கிறார்.

சமிக்ஷா கவர்ச்சியாக வந்து போகிறார். கருணாஸ், கதை ஓட்டத்துக்கு கை கொடுக்கிறார். வழக்கமான நக்கல், நையாண்டியுடன் குணச்சிரத்திர நடிப்பையும் காட்டி அசத்துகிறார். இவருடைய காதல், கதையில் திருப்பத்தை ஏற்படுத்துகிறது.

ஸ்ரீகாந்த் அப்பாவாக டெல்லிகணேஷ். மிரள வைக்கிறார். அருமையான நடிப்பு. பிதாமகன் மகாதேவன், சினேகா நம்பியார், அஞ்சலி தேவி, எஸ்.என்.லட்சுமி ஆகியோர் பூவின் இதழ்களாகவும், மணமாகவும் மாறி இருக்கிறார்கள்.

கார்த்திக்ராஜா இசையில் ஒலிக்கும் கவிஞர் பா.விஜய் பாடல்கள் அத்தனையும் வசியப்படுத்தும் வகை. ரமேஷ்பாபு ஒளிப்பதிவு கச்சிதம். கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: எஸ்.எஸ்.ஸ்டேனிலி, நடுத்தர குடும்பத்தில் நடக்கும் பிரச்சினைகளை அப்படியே கண் முன் நிறுத்தியிருக்கிறார். கணவன் – மனைவியிடையே ஏற்படும் ஊடல்களை அணுபிரளாமல் திரைக்குக் கொண்டு வந்து பிரமிக்க வைக்கிறார். சில இடங்களில் தொய்வு இருந்தாலும் அதை வசனத்தால் சரி செய்கிறார். செக்ஸ் மட்டும் வாழ்க்கை இல்லை கணவன் – மனைவி உறவு அதையும் கடந்தது என்ற சொல்லி ரசிகர்களைக் குடும்பத்துடன் தியேட்டருக்கு வர கம்பளம் விரித்திருக்கிறார்.

வாசம் நிறைந்த வண்ணமலர்.

அமைதிக்கு உழைப்பதே உலகிற்கு நாம் செய்யும் கடமையாகும். சமாதான முழக்கங்களை வெறுமனே கூறிக்கொண்டிராமல் அமைதிக்காகத் தீவிரமாகப் பாடுபட்டால் வருங்கால உலகம் பாதுகாக்கப்படும். -டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# மேதினத்தில் ஈழத் தமிழர்களுக்காக உரிமைக் குரல் கொடுங்கள்

இன்று மேதினம். உலகு வாழ் தொழிலாளர் வர்க்கம் உரிமை பெற்ற நாள். முதலாளித்துவ சித்திரவதைக்குள் இருந்து விடுபட்ட நாள்.

பகலிரவு என்றில்லாமல் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்துபோன தொழிலாளர் வர்க்கம் தனது உழைப்பிற்கான ஊதியத்தைக் கூடப் பெற முடியாமல் கையேந்தி நின்றது.

தொழிலாளர் வர்க்கத்தின் ஏழ்மையையும் உண்ண உணவின்றித் தவிப்பதையும் பார்த்த முதலாளித்துவ சமூகம் அவர்களுக்காக இரங்கவில்லை.

மாறாக அவர்களைப் பார்த்து ஏளனம் செய்தது. முதலாளித்துவ வர்க்கத்தின் ஏளனமும் உழைப்பிற்கேற்ற ஊதியமும் கிடையாமல் தவித்த தவிப்பும் தொழிலாளர் வர்க்கத்தின் இதயக் கதவுகளில் ஓங்கியடித்தது.

அந்த அடிப்பின் ஒலிப்பு 'எத்தனை நாட்களுக்குத்தான் நாங்கள் அடிமைகளாய் வாழ்வது, எங்களுக்கென்று உரிமை வேண்டாமா'

இது தொழிலாளர்களின் இரத்தத்தோடும் சுவாசத்தோடும் கலந்து கொள்ள முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்தில் தொழிலாளர் வர்க்கம் திரண்டெழுந்தது. அதன் விளைவே எட்டு மணித்தியால வேலையாக நிர்ணயிக்கப்பட்டது.

அன்று முதல் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்களும் யாப்புகளும் தோற்றம் பெற்றன.

இவ்வாறு தொழிலாளர்களின் உரிமை வலுப்பெற்ற தினத்தைக் கொண்டாடுவதாகவே மேதினம் அமைந்துள்ளது.

இது சர்வதேசத்தின் ஒட்டுமொத்த வரலாற்றுப் பார்வை. இந்தப் பார்வை ஈழத் தமிழர்களுக்கு எந்தளவு தூரம் பொருத்துடையது என்றால் தலையில் கைவைத்துக் கதற வேண்டும் போல் நிலைமையுள்ளது.

அன்று முதலாளிகளின் நிலங்களில் தானியச் செய்கையில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மாடாய் உழைத்தனர். ஆனால் இன்று இலங்கையிலோ ஈழத் தமிழர்கள் தமது சொந்த நிலத்தில் பயிர் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

'உயர் பாதுகாப்பு வலயம்' என்ற பிரகடனத்தின் ஊடாக தமிழ் மக்களின் குடியிருப்புக்களும் பயிர் செய் நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

எட்டு மணித்தியால வேலை நேரத்திற்காக தொழிலாளர் வர்க்கம் போராடியதெனில், தமது சொந்த நிலத்திலேயே பயிர் செய்ய முடியாத ஈழத் தமிழர்கள் மட்டும் போராட்டம் நடத்துவது தவறு என யாரேனும் கூறுவார்களாயின், அவர்கள் மானிடத்தின் அடிப்படைப் பண்புகள் கூட இல்லாதவர்கள் என்றே கூற வேண்டும்.

எதுவாயினும் சொந்த நிலத்தில் இருப்பதற்கே உரிமை மறுக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்காக உரிமை கொடுப்பதே இன்றைய மேதினத்தின் கருப்பொருளாக இருக்க வேண்டும்.

# அமைச்சுப் பதவிகளை ஏற்பதா? ஜே.வி.பிக்குள் உள்வீட்டுக் குழப்பம்

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முக மாக மஹிந்த ராஜபக்ஷ எடுக்கும் எந்தவொரு செயற் பாட் டிற்கும் முழு ஆதரவளிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐக் கிய தேசியக்கட்சியினருக்கு அறிவுறுத்தியுள்ளார்.



இராணுவ தலைமை யைக் குண்டுவெடிப்பினைய டுத்து அமெரிக்காவில் இருந்து கட்சியின் உபதலைவர் உட்பட்ட முக்கிய உறுப்பினர்களுடன் தொடர்புகொண்ட ஐக் கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்துள்ளார். நாடு மீண்டும் யுத்தத்தை நோக்கி தள்ளப்படுவதைத் தவிர்ப்பதற்காக மஹறந்த ராஜபக்ஷ எதிர்பார்க்கும் எந்தவொரு ஒத்துழைப்பையும் வழங்கு மாறு அவர் தனது கட்சியினருக்கு கூறியிருக்கிறார்.

இதனிடையே அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்திற்குச் செல்வதாக இருந்தால் மட்டுமே மஹிந்த முன்வைத்துள்ள அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று அரசிற்கு பூரண ஆதரவளிப்பதாக ஜே.வி.பி தீர் மானித்திருப்பதாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத் தலைமையக குண்டுவெடிப்பினைய டுத்து அரசாங்கம் யுத்தத்திற்கு செல்லுமென்ற நம்பிக்கையின் பேரில் ஜே. வி. பி.பிரசார செயலாளர் விமல் வீர வன்ச அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கலா மென்ற யோசனை யைமுன்வைத்த போதிலும், அதற்கு எதிராக கருத்துத் தெரிவித்துள்ள கட்சியின் பொதுச் செயலாளர்டில்வின் சில்வாவும், அனுர குமார திசநாயக் கவும் இதுபற்றி அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியாமையரல் சிறிதுகாலம் பொறுத்திருந்து முடிவெடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.



இதற்கமைய அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதா இல்லை. சிறிது காலம் பொறுத்திருப்பதா என்பது பற்றி கட்சியினுள் தீர்மானம் எடுக்க முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும் கொழும்பு பத்திரிகை தெரிவித்துள்ளது.(கு)

# பயன்படுத்தப்படாமலிருக்கும் 4கோடி 50 இலட்சம் பெறுமதியான அதிசிறந்த 'ஸ்கானர்' உபகரணம்!

## இரத்தினபுரி போதனாவைத்தியசாலையின் அவலநிலை

(கொழும்பு)

நோய்களைக் கண்டறிவதற்கும், சிகிச்சையளிப்பதற் கும் தேவையான, கூடுதலான நவீன உபகரணங்களை அனைத்து வைத்தியசாலைகளுக்கும் வழங்கியுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

அந்த உபகரணங்களைக் கொண்டு உரிய பயன்பாட்டைப் பெறுவது, வைத்தியசாலைகளின் பொறுப்பாகுமென அவர் மேலும் தெரிவித்தார். அவ்வாறு உபகரணங்களை பயன்படுத்தாவிடில் அவற்றை வேறு வைத்தியசாலைகளுக்கு பெற்றுக் கொடுப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் குறைபாடுகளைக் கண்டறிவதற்காக அண்மை யில் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராட்சி , சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் டாக்டர் நிகால் ஜயதிலக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் அத்துலக லியனகே உள்ளிட்ட குழுவினர் இந்த விஜயத் தில் இணைந்து கொண்டார்கள்.

இரத்தினபுரி வைத்தியசாலையில் பாலியல் நோய் சிகிச்சைகளுக்காக புதிய கட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு அமைச்சு 80இலட்சம் ரூபாவை பெற்றுக் கொடுத்துள்ளது.

எனினும் இதன் நிர்மாணப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. 4கோடி 50இலட்சம் ரூபா பெறுமதி யான 'ஸ்கானர்' உபகரணம் பெற்றுக் கொடுக்கப்பட்ட போதி லும், மின்சார வசதியின்மையால் அது உரிய முறை யில் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது.

இவ் உபகரணத்தின் வருடாந்த பராமரிப்பு செலவு 35 இலட்சம் ரூபாவாகும். இரத்தினபுரி வைத்தியசாலையில் நரம்புத் தொகுதி சத்திரசிகிச்சையின்மையை இந்த விஜயத்தின் போது கண்டறிந்ததாக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். இந்த விஜயத்தின் போது மேலும் பல குறை பாடுகள் கண்டறியப்பட்டதாகவும், அவர்களுக்கு விரைவில் தீர்வு - காண்பதற்கு அதற்குப் பொறுப்பான உத்தியோகத் தர்களுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார் என வும் அறிவிக்கப்படுகிறது. (து-7)

# உதிரத்தில் உரம் அமைத்தவர்கள் உன்னதமான தொழிலாளர் வர்க்கம்

## பிரம்ம குமாரிகள் யோக நிலையம் அறிக்கை

உதிரம் தனில் உரம் சமைத்து உலகின் உன்னதம் காக் கும் நாட்டின் வளம் போற்றும் தொழிலாளர் பெருமக்களின் உரிமைகளைக் காக்கவும் ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தினை ஒழித்திடவும் உருவாக்கப்பட்டதே சர்வதேச தொழிலாளர் தினமாகும்.

ஒரு இயந்திரத்தினால் எவ்வளவோ பெரிய அளவி லான காரியங்கள் கூட செய்யப்படலாம். ஆனால் அதன் ஒவ்வொரு இயக்கத்திற்கும் ஒவ்வொரு சிறிய நுண்ணிய உதிரிப்பாகங்களும் உறுப்புக்களுமே காரணமாக அமைகின்றன.

அதேபோன்று தான் நமது நாட்டின் உயர்வும், வளர்ச்சியும், ஒவ்வொரு தொழிலாளியினதும் சேவையிலும், சிந்தும் வியர்வையிலும், செலவழிக்கின்ற ஒவ்வொரு கணத்திலுமே தங்கியிருக்கின்றது. ஆகவே தொழிலாளர்களது உரிமைகளும், அடிப்படைத் தேவைகளும் பாதுகாக்கப்படுதல் அவசியமானதொன்றாகும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்தர பரீட்சை கடமைகளில் ஈடுபடுவோருக்கு மேலதிக கொடுப்பனவு வழங்க தீர்மானம்

க.பொ.த.உயர்தரப் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடவுள்ளவர்களுக்கு 20 சதவீதமான மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர், ஊழியர் மற்றும் விடைத்தாள் திருத்துநர்களுக்கே 20 சதவீதத்தால் கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, விடைத்தாள் திருத்தும் நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதனால் விடைத்தாள் திருத்தும் பணியை விரைவில் நிறைவு செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகளில் பொறுப்புணர்வுடன் செயற் படும் ஆசிரியர்களுக்கு விடைத்தாள் திருத்துவதற்கு முன்னுரிமையும் வழங்கப்படும்.

எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணி 3 கட்டங்களாக நடைபெறவுள்ளது. இதற்காக 18 ஆயிரம் பேர் கடமையில் ஈடுபடவுள்ளனர். (து-9)

# மூதூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒருமாத காலத்துக்கு உலர் உணவு

மூதூர் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான அனுமதியை திருகோணமலை மாவட்ட அரச அதிபர் லியானந்த வழங்கியுள்ளார் என மூதூர் பிரதேச செயலாளர் எம்.எ.எம்.நியாஸ் தெரிவித்துள்ளார். அப்பகுதியில் அண்மையில் மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை இரா ணுவ நடவடிக்கை மற்றும் விமானத் தாக்குதல் காரண மாக இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளிலும் பொது இடங் களிலும் தங்கியுள்ளார்கள்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதற் கட்ட தொண்டர் நிறுவனங்களின் உதவி கடந்த வெள்ளிக் கிழமை மூதூர் கிழக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதற் கான அனுமதியினை அரச அதிபரூடாக இலங்கை இரா ணுவ தலைமையகத்தில் பெற்று கட்டைபறிச்சான் இலங்கை இராணுவ முகாமூடாக இப்பொருட்கள் அனுப் பிவைக்கப்பட்டன என்று பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் மூதூர் கிழக்கிலுள்ள பாட்டாளிபுரம் தொடக்கம் வெருகல் பிரதேச செயலாளர் பகுதியிலுள்ள கல்லடிவரை பரந்து இடம்பெயர்ந்து தங்கியுள்ளதாக தொண்டர் நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இவர்களுக்கான குடிநீர் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



குருவருளையும் நாம் மறந்திருக்கிறோம். திருவருளையும் மறந்திருக்கிறோம். சுயமுயற்சியையும் மறந்திருக்கிறோம். குருவருள், திருவருள் சுய முயற்சி ஆகியவை முக்காலியின் மூன்று கால்கள் மாதிரி ஆன்மிக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

சுவாமி விவேகானந்தர்



வெலிக்கந்தைத் தாக்குதலுக்கு வியூகம் அமைக்கும் விடுதலைப்புலிகள்



கொழுந்து விட்டெரியும் கருணா குழுவின் முகாம்



புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் (நன்றி-தமிழ்நெற்)

# ஆள் மாறி கடத்தப்பட்ட இளைஞன் மறுநாள் அதிகாலை விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெள்ளை வானில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட இளைஞர் ஒருவர் மறுநாள் அதிகாலை விடுதலை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் வெள்ளை வானில் வந்த சிலர் தீபன் என்ற இளைஞனை கடத்திச் சென்றுள்ளனர். மறுநாள் அதிகாலை தன்னைக் கடத்திச் சென்றவர்கள் ஊரெழுப் பகுதியில் இறக்கி விட்டுச் சென்றதாக அவ்விளைஞன் கூறியுள்ளார்.

ஆள் தெரியாமல் கடத்தியதாகக் கூறியே அவர்கள் அவ்விளைஞனை விடுவித்ததாக தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

(ச-132)

## சுய பாதுகாப்பு...

களை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். கடற்படையினரின் கடற்படைப் படகுகள்மீதும் கரையிலிருந்த இராணுவ முகாம்கள் மீதும் எமது படகுகளில் இருந்த போராளிகள் பதில் தாக்குதலை நடத்திய பின் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

திருகோணமலையைச் சென்றடைந்த எமது படகுகள் அங்கிருந்த எமது போராளிகளை ஏற்றிக் கொண்டு முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்டனர்.

நடந்ததைத் தெரிந்து கொண்ட கடற்படையினர் தாக்குதலை நிறுத்தி விட்டு எமது ப்டகுகளுக்குப் பாதுகாப்பு வழங்கியவாறு பின்தொடர்ந்தனர்.

தமது முகாம்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் வரை கடற்படைப் படகுகள் வழித்துணை வழங்கியிருந்தன. போராளிகளை ஏற்றிக் கொண்டு வந்த எமது படகுகள் இரவு 10.30 மணியளவில் தளம் திரும்பின.

இதேவேளை முல்லைத்தீவில் கொக்கிளாய் மற்றும் கொக்குத்தொடுவாய் ஆகியஇடங்களில் அமைந்திருக்கின்ற இராணுவத்தினரின் முகாம்களின் மீது படகுகளில் வந்த விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து தாம் திருப்பித் தாக்கியதாகவும் தற்போது நிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகவும் இம் மோதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் எவையும் உடனடியாகத் தெரியவில்லை எனவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தாக்குதல்கள் தொடர்ந்து இடம் பெறுவதால் கொக்கிளாய்ப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச-4)

## கருணா குழுவின் முகாம்கள்...

மட்டக்களப்பு - பொலநறுவை எல்லையில் வெலிக்கந்தைக்குக் கிழக்கில் ஏழு கிலோமீற்றர் தொலைவில் உள்ள காசங்குளம் என்ற இடத்தில் இம் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானுவின் கண்காணிப்பின் கீழ் இத் தாக்குதல் நடத்தப்பட்டு துணை இராணுவக் குழுவினரது முகாம்கள் அழிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

கண்டக்காடு இராணுவ முகாம் அருகே ஒரு துணை இராணுவக் குழு முகாமும் காசங்குளம் இராணுவ காவல் நிலையம் அருகே மற்றொரு முகாமும் இந்த இரண்டு முகாம்களுக்கு இடையில் மூன்றாவது முகாமும் அமைக்கப்பட்டிருந்தன.

துணை இராணுவக் குழுக்களின் ஒன்று கூடலுக்காக அனைத்து துணைக் குழுக்களின் உறுப்பினர்களும் காசங்குளம் முகாமில் ஒன்று கூடினர். பின்னர் காசங்குளம் முகாம், தீவுச்சேனை முகாம், காக்காடு முகாம் ஆகியமூன்று முகாம்களில் தங்கியிருந்தனர்.

இம் முகாம்களைச் சுற்றி இராணுவத்தினரின் முகாம்கள் இருந்த போதும் ஒரு மணிநேரத்திற்கு மேலாக தமிழீழ விடுதலைப்புலிகள் இத்தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதில் துணை இராணுவக் குழுவான ஈ.என்.டி.எல்.எஃப்.முக்கிய உறுப்பினர்களும் மற்றொரு துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் வெளிநாட்டிலிருந்து வந்த முக்கிய உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது என புலிகள் தெரிவித்தனர்.

கருணா குழுவைச் சேர்ந்த மார்க்கன், ரீ.கசீலன், சின்னத்தம்பி ஆகியோரும் இம் முகாமில் இருந்ததாக கூறப்படுகின்றது. தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த ஒன்பது பேர் வெலிக்கந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திலிருந்து பதினைந்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இருதரப்புக்கும் மோதல் இடம்பெற்ற சமயம் துணை இராணுவக் குழுவினரை பாதுகாக்கும் நோக்கில் அவர்களுக்கு ஆதரவாக இராணுவத்தினரால் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு ஆட்லறித் தாக்குதல்களும் தங்கள் மீது நடத்தப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து துணை இராணுவக் குழுக்களின் பெருமளவு ஆயுதங்கள் அழிக்கப்பட்டதுடன் ரி-56-2 துப்பாக்கிகள், பி.கே-எல்.எம்.ஜிகள், 81 மில்லிமீற்றர் மோட்டார்கள், அதற்குரிய ஷெல்கள், இரு ஹயஸ் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை கைப்பற்றப்பட்ட இரு ஹயஸ் வாகனங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரது வாகனங்கள் என்றும் ஆனால் கடத்தப்பட்ட ஏழு பணியாளர்களும் அங்கிருந்தமைக்கான தடயங்கள் ஏதும் இல்லையென விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் தங்கள் தரப்பில் எதுவித உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை என்றும் போராளி ஒருவர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். (முன்னர்வந்த செய்தி உள்ளே)

(ச-4,5)

# திருடனை மடக்கிப் பிடித்த மக்கள் உரிய மரியாதை வழங்கினர்

## சுதுமலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஹயஸ் வானில் திருடச் சென்ற 12 பேர் அடங்கிய கும்பலில் ஒருவர் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார். இச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் சுதுமலை அம்மன் கோவிலுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ஹயஸ்வானில் சென்ற 12 பேர் அடங்கிய திருட்டுக் கும்பல் ஒன்று ஒரு வீட்டினுள் புகுந்து திருட்டு முயற்சியில் ஈடுபட முற்பட்டனர்.

அச் சமயம் அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து திருடர்களைத் துரத்திச் சென்ற போது ஒருவர் அகப்பட்டுக் கொண்டார். அவரை மின்கம்பம் ஒன்றில் கட்டி வைத்து மக்கள் உரிய மரியாதையை வழங்கினர்.

இது தொடர்பாக மானிப்பாய்ப் பொலிஸுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பவள் கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினருடன் சம்பவ இடத்திற்குச் சென்ற மானிப்பாய்ப் பொலிஸார் பிரஸ்தாபத் திருடனை மீட்டு சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இதேவேளை இவ்வாறாக மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் திருட்டுக் கும்பல்களை இல்லாது ஒழிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ச-132,15)

## தனியார்...

கிளையும் கைக்குண்டு ஒன்றையும் ஜும்மாப் பள்ளிவாசல் ஒழுங் கையில் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து யாழ்.நகரின் பிரதான வீதிகள் மூடப்பட்டு இராணுவத்தினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.(ச-132,15)

## சமாதான...

எந்தவொரு யோசனையையும் விமானத் தாக்குதலை நிறுத்தியபிறகு தெரிவிக்குமாறும் அமைச்சரிடம் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

விமானத் தாக்குதலை நிறுத்தி விடுவதாகவும் அரசாங்கத்தின் யோசனையை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்து விடுமாறும் ரம்புக்வெல பதிலளித்துள்ளார்.

இந்த தொலைபேசி உரையாடலை அரசாங்கத்தரப்பு உறுதிப்படுத்திய போதும் விடுதலைப்புலிகள் தரப்பு உறுதிப்படுத்தவில்லை.

(ச-4,5)

## உதிரத்தில் உரம்...

இதற்குச் சிறந்த ஒரு வழிமுறைதான் அவரவர் செய்கின்ற தொழில் எதுவாயினும் அனைவருக்கும் மதிப்பினை மனதார அளிக்க வேண்டும்.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் மரியாதை என்ற விழுமியத்தினை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். போலியாக அன்றி உண்மையாகவே சாதாரண சேவையை ஆற்றி வரும் தொழிலாளிக்குக் கூட அன்பையும் மதிப்பையும் கொடுக்கும் போது அங்கே பரந்தளவில் சேவையும் பாரியளவில் முன்னேற்றமும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனால் அவரவர் பதவிக்கும், சேவைக்கும், உணர்வுக்கும் மரியாதை வழங்கப்படும் போது கீழ் மட்ட, மேல் மட்ட வேறுபாடுகள் இன்றி சமத்துவமானது பேணிப் பாதுகாக்கப்படும் என பிரம்ம குமாரிகள் ராஜயோகநிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் தான் யார் என்பதைப் புரிந்து கொண்டு தன்னுடைய தர்மம் என்ன என்பதையும் புரிந்து கொண்டு அதன் வழிப்படி வாழும் போதே அடிமைத்தனம் என்ற பதமானது அஸ்தமனமாகி பாதுகாப்பு என்பது உதயமாகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

# மனிதத் தலை மீட்பு

(வவுனியா)

வவுனியா வைரவ புளியங்குளம் பிரதேசத்தில் துண்டிக்கப்பட்ட மனிதத் தலை ஒன்றை வவுனியாப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் இந்த மனிதத்தலையை வீதியோரத்தில் இருந்து பொலிஸார் நேற்று காலை 10 மணியளவில் மீட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(து-9)

## உவரொழு...

சைக்கிளில் சென்ற இருவரே இத்தாக்குதலை மேற் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதலையடுத்து அப் பகுதியில் சுற்றி வளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

(ச-132,15)









இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 01.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.